பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 28 செவ்வாய்க்கிழமை (11-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:198

# வாஜ்பாய் - ரணில் இன்று முக்கிய பேச்சு

## தடைநீக்கம், சமாதானப்பேச்சு என்பன குறித்து ஆராயப்படும்

புதுடில்லி,ஜூன்11

**நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் இன்று முக்கிய பேச்சுக் களை நடத்தவிருக்கின்றார்.**

**நோர்வே அரசின் உதவியுடன் விடுதலைப் புலி களுடன் நடத்த உத்தேசித்துள்ள பேச்சு மற்றும் புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்குவது, வடக்கு - கிழக்கு நிர்வாகத்தை புலிகளிடம் ஒப்ப டைப்பது ஆகியன தொடர்பாக இந்திய அரசின் நிலைப்பாட்டை அவர் கேட்டறிவார் எனத் தெரிவிக் கப்பட்டது.**

கடந்த சனிக்கிழமை இந்திய விஜயத்தை மேற்கொண்ட பிரதமர் பெங்களூரில் தங்கியிருந்து நேற்றுப் புதுடில்லி போய்ச் சேர்ந்தார். அங்கு அவருக்கு பெரும் வரவேற்பு அளிக் கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சோனியா காந்தி, நிதியமைச்சர் ஜஸ்வந் சிங்ஹா, வாணிப, வர்த்தக அமைச் சர் முரசொலிமாறன், முன்னாள் பிர தமர் நரசிம்மராவ் ஆகியோருடன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பயணிகள் பஸ் ரயிலுடன் மோதி விபத்து

### சாரதி பலி; நடத்துநர் கால்கள் இழப்பு

கொழும்பு,ஜூன்11

புத்தளம், பாலாவி என்னுமிடத் திலுள்ள ரயில் கடவையில் பஸ் வண்டியொன்று ரயிலுடன் மோதி யது. இதனால் பஸ் சுக்குநூறாகி யது. பஸ் சாரதி கொல்லப்பட்டார். பஸ் நடத்துநரின் இரு கால்களும் துண்டிக்கப்பட்டன. 10 பிரயாணிகள் படுகாயமடைந்தனர்.

கொழும்பிலிருந்து புத்தளம் ஊடாக யாழ்ப்பாணத்திற்குச் சென்று கொண்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் மூழ்கி மாணவன் பலி!

வடமராட்சி,ஜூன்11

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய மாணவன் சிறில் பிரின்ஸ் (வயது 15) நேற்றுமுன்தினம் கடலில் மூழ்கி மரணமாகியுள்ளார்.

சக மாணவர்கள் மூவருடன்

(12ஆம் பக்கம் பார்க்க)

### மூச்சந்தி முரளி



...அப்ப யுத்தம் இப்ப வளா கத்துக்குள்ள எண்டு சொல் லுங்கோ...

### படையினரை விலகும்படி கோரி

## ஹாட்லி, மெதடிஸ் மாணவர் வகுப்புகளைப் பகிஷ்கரிப்பு!

வடமராட்சி,ஜூன்11

பருத்தித்துறை ஹாட்லிக் கல் லூரி, மெதடிஸ்த பாடசாலை ஆகிய வற்றின் மாணவர்கள் தமது வகுப்பு களைப் பகிஷ்கரிக்கும் போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பாடசாலை ஆகியவற்றின் நுழை வாயிலில் உள்ள காவலரணை அகற்றும்படியும் -

ஹாட்லிக் கல்லூரியில் இருந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்களின் போராட்டத்தால் செயலகம் நேற்றும் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம்,ஜூன்11

இருநாள் இடைவெளியின் பின்னா மீனவர்களின் மறியறபோராட்டம் யாழ. செயலகம, யாழ். பிரதேச செயலகம், மீன்பிடித் திணைக்களம் ஆகியன முன்பாக நேற்று மீண்டும் ஆரம்ப மானது இதனால் அந்த அலுவலகங் கள் முற்றாகச் செயலிழந்தன.

சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் -

கரையோரங்களில் உள்ள மீனவர் குடியிருப்புக்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும் என்றும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாளை நடைபெறும் ஹர்த்தாலுக்கு தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு ஆதரவு

யாழ்ப்பாணம்,ஜூன்11

புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதில் அரசுத் தரப்புக் காட்டிவரும் அசமந்தப் போக்கைக் கண்டித்தும் - உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியும் நாளை புதன்கிழமை குடாநாட்டில் நடைபெறவுள்ள ஹர்த் தாலுக்கு பூரண ஆதரவு வழங்க வேண்டும் என்று தமிழ்க்கூட்டமைப் பின் மூன்று நாடாளுமன்ற உறுப்பி னர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜி லிங்கம் ஆகியோரே கூட்டாக இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.


அவர்கள் விடுத்துள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசினா லும் தமிழீழ விடுதலைப் புலிகளி னாலும் கைச்சாத்திடப்பட்டு நூறு நாள்கள் கடந்துவிட்டன. இப்புரிந்து ணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் இயல்பு வாழ்க்கை ஏற்படப்போகின்றது என்ற நிம்மதி மக்களுக்கு ஏற்பட்டது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்பட்டு, சமாதானம் ஏற்படும், போர் நிரந்தரமாக நிறுத் தப்படும் என்ற எதிர்பார்ப்புக்கள் எழுந் தன.

ஆனால் எதிர்பார்த்ததுபோல தமிழ் மக்கள் வாழ்வில், தமிழ்த்

(12ஆம் பக்கம் பார்க்க)



பல்கலை மாணவர் குழு ஒன்றினால் துவம்சம் செய்யப்பட்ட தொலைத்தொடர்பு நிலையத்தில் தடயங்களைத் தேடும் பொலீஸார். *(மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)*

### கற்கள், கம்பிகள், பொல்லுகள், வாள்கள் கொண்டு சமர்

# மாணவர் மோதல் நேற்று உச்சக்கட்டம்! தொலைத்தொடர்பு நிலையம் துவம்சம்!!

யாழ்ப்பாணம்,ஜூன்11

யாழ். பல்கலைக்கழகத்தின் இரு பீடங்களைச் சேர்ந்த மாணவர் குழுக் களுக்கிடையில் கடந்த வெள்ளிக் கிழமை ஆரம்பித்த மோதல்கள் நேற்று உச்சக்கட்டத்தை அடைந்தன.

வெள்ளியன்று நடந்த மோத லின் எதிரொலியாக நேற்று முற்பகல் 11 மணியளவில் ஒரு பீடத்தைச் சேர்ந்த மாணவர் குழு ஒன்று பல் கலைக்கழகத்துக்கு முன்பாக - இராம நாதன் வீதியில் - அமைந்திருந்த தொலைத்தொடர்பு மற்றும் போட்டோ பிரதி எடுக்கும் வர்த்தக நிலையம் ஒன்றினை இரும்புக்கம்பிகள் கொண்டு அடித்து நொறுக்கி நாசமாக்கியது.

இந்தத் தொலைத்தொடர்பு நிலை யம் யாழ். பல்கலைக்கழகத்தின் மற் றொரு பீடத்தைச் சேர்ந்த இறுதி வருட மாணவர் ஒருவருக்குச் சொந்த மானது என்று கூறப்படுகிறது.

அந்த நிலையத்தில் இருந்த தொலைத்தொடர்புக் கருவிகள், போட்டோஸ்ரட் இயந்திரம், கண் ணாடிக் கூண்டுகள் மற்றும் கதிரை மேசைகள் என்பன இத்தாக்குதலில் முற்றாகத் துவம்சமாக்கப்பட்டன.

கடையின் விளம்பரப்பலகை கூட மாணவர்களின் தாக்குதலுக்குத் தப்பவில்லை.

இத்தாக்குதலில் சுமார் நாலரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள் கள் நாசமாக்கப்பட்டதாக மதிப்பிடப்பட் டுள்ளது.

தொலைத்தொடர்பு நிலையம் தாக்கப்பட்டதைத் தொடந்து மாண வர் குழுக்கள் வளாகத்தின் உள்ளே கடும் மோதலில் இறங்கின.

இரு பீடங்களைச் சேர்ந்தோர் ஓர் அணியாகவும் மற்றொரு பீடத்தினர் மறு அணியாகவும் நின்று மோதினர்.

வாள்கள், பொல்லுகள், இரும்புக் கம்பிகள், கற்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி இருதரப்பினரும் சமர் புரிந்தனர்.

இந்த மோதலில் இரு தரப்பை யும் சேர்ந்த மாணவர்கள் சிலர் காயங்க்ளுக்கு இலக்காகினர். பல ருக்கு கடுமையான உட்காயங்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று பீடங்களின் மாணவர்கள் வளாகத்துள் பிரவேசிக்கத் தடை!

### மோதல் குறித்து விசாரிக்கக் குழு

யாழ்ப்பாணம்,ஜூன்11

யாழ். பல்கலைக்கழகத்தின் பீடங் களைச் சேர்ந்த மாணவர் குழுக்களுக் கிடையில் இடம்பெற்ற மோதல் சம் பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென இருவர் கொண்ட குழுவொன்று பல்கலைக் கழக நிர்வாகத்தினால் நியமிக்கப்பட் டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இந்தச் சம்பவத்தின்போது மாணவர் குழுவொன்றினால் மாண வர் பொதுஅறையில் உள்ள பல பொருள்கள் அடித்து நொறுக்கப்பட் டன. இதனை அடுத்து பல்கலைக் கழகத்தின் உள்ளே செல்வதற்கு மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### சிறுசிறு சச்சரவுகளுக்காக மோதுவதா?

# மாணவர்கள் தமக்குள்ளே பேசித் தீர்ப்பதே நல்லது!

## தமிழர் பேரவைத் தலைவர் கருத்து

யாழ்ப்பாணம்,ஜூன்11

நாடு ஒரு பெரிய பிரச்சினையை எதிர்கொண்டுள்ள வேளையில் மாணவர்கள் தமக்கிடையே ஏற்படும் சிறு சிறு பிரச்சினைகளைத் தமக்குள்ளேயே பேசித் தீர்த்துவிட வேண்டும். அதுவே அவர்களுக்குரிய நற்பண்பாகும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றுவரும் மாணவர் குழு மோதல் பற்றி உலகத் தமிழர் பண்பாட்டுப் பேரவைத் தலைவர் இரா.சனார்த்தனம் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள அவர் நேற்று பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தவேளை வளாகத்துக்கு வெளியே இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி கேட்டறிந்தார். அதன்பின் 'உதயன்' செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய விவகாரங்களில் செலவிட வேண்டிய நேரத்தை இத்தகைய சிறுசிறு சம்பவங்களுக்குச் செலவிடுவது தமிழ் சமூகத்துக்கு நன்மை பயக்காது என்றும் அவர் கவலை தெரிவித்தார். (ஐ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்11


பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் இரத்தினசாமி ஞாபகார்த்த கேடயத்துக்காக கழக மைதானத்தில் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் வல்வை விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஐ-ரி)

## பாடசாலை மட்ட கண்காட்சி

மண்டைதீவு,ஜூன்11

மண்டைதீவு மகாவித்தியாலய பாடசாலை மட்டக் கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

சமூகக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்கள் தொடர்பான கண்காட்சியே இவ்வாறு இடம்பெறவுள்ளது (எ-9-ரி)







யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இருந்த தொலைத்தொடர்பு மற்றும் போட்டோ பிரதி எடுக்கும் நிலையம் ஒன்றினுள் நேற்று நுழைந்த பல்கலைக்கழக மாணவர்கள் என்று கூறப்படும் சிலர் இரும்புக் கம்பிகள் கொண்டு அந்த நிலையத்தை துவம்சம் செய்தனர்.

அவர்களின் தாக்குதலுக்கு இலக்காகி அந்த நிலையம் சின்னாபின்னப்பட்டுப்போய்க் கிடப்பதையும் பொருள்கள் அனைத்து அடித்து நொறுக்கப்பட்டு, சேதமாக்கப்பட்டுக் கிடப்பதையும் படங்களில் காணலாம். இது தொடர்பான விசாரணைகளை பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முறிகண்டி பிள்ளையார் ஆலய புனரமைப்புக்கு ஒரு கோடி ரூபா

## இந்து கலாசார அமைச்சு ஒதுக்கீடு

கிளிநொச்சி,ஜூன்11

முறிகண்டிப்பிள்ளையார் ஆலயத்தைப் புனரமைக்கவும் அங்கு அடியார் தங்குமிடம் அமைக்கவும் ஒரு கோடி ரூபாவை இந்து கலாசார அமைச்சு ஒதுக்கியுள்ளது.

இந்த வேலைகளை ஆரம்பிப்பதற்காக மூன்று லட்சம் ரூபா, முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அங்கு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தின் மூலவர் இருப்பிடத்தைப் புனரமைக்க 12 லட்சம், யாகசாலை, களஞ்சியம் ஆகியன அமைக்க 10 லட்சம், திருமஞ் சனக் கிணறு புரைமைக்க 2 லட்சம், பொங்கல் மண்டபம் அமைக்க மூன்று லட்சம், அன்னதான மண்டபம் அமைக்க 12 லட்சம், பூசகர் விடுதி அமைக்க 8 லட்சம், அடியார் தங்குமிடம் அமைக்க 30 லட்சமும் -

மலர் மற்றும் முக்கனித் தோட்டங்கள் அமைக்க ஒரு லட்சம், தென்னை, நிழல்தரு மரங்களை நட்டுப் பராமரிக்க ஒரு லட்சத்து 50ஆயிரம், சுற்று மதில், மலசலகூடம், தண்ணீர் தாங்கி ஆகியன அமைக்க 30 லட்சமும் - ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆலயத்தைப் புனரமைப்பதற்காக நீர்கொழும்பில் இருந்து செங்கற்கள் அங்கு எடுத்துவரப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## நாளை நடக்கவிருந்த மெய்வன்மை போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்11

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய வன்மைப்போட்டிகளில் நாளை புதன் கிழமை நடைபெறவிருந்த போட்டிகள் அனைத்தும் நாளைமறுதினம் 13ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் அதே ஒழுங்கின்படி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# நயினை அம்மன் உற்சவத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

யாழ்ப்பாணம்,ஜூன்11

வரலாற்றுப் பெருமைமிகு நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்றுப்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஆயிரக்கணக்கான அடியார்கள் கொடியேற்றத் திருவிழாவில் கலந்து கொண்டு அம்மனைத் தரிசித்தனர்.

அடியார்களின் போக்குவரத்து வசதி கருதி வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் குறிகாட்டுவானுக்கு விசேட பஸ் சேவை நடத்தப்பட்டது.

கொடியேற்றத்துக்கு முன்னதாக அமுதசுரபி அன்னதான சபையினரால் புதிதாக அமைக்கப்பெற்ற அன்னதானமண்டபும் காலை 10.30 மணியளவில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

கடந்த வருடங்களை விட இம்முறை அதிக அளவிலான பக்தர்கள் கொடியேற்றத் திருவிழாவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. யாழ். குடாநாடடுக்கான தரை வழிப்பாதை திறக்கப்பட்டதை அடுத்துப் பெரும்பான்மை இனமக்களும் நேற்றைய திருவிழாவில் கலந்துகொண்டதைக் காணமுடிந்தது.

கடற்படையினரால் கடந்த வருடங்களைப் போன்று இம்முறையும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அல்லைப்பிட்டி மற்றும் மடத்துவெளி தடைமுகாம்களில் அடியவர்கள் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஆலயச் சூழலில் தொண்டர் சேவை, தங்குமிட வசதிகள், முதலுதவி, குடிதண்ணீர் மற்றும் அன்னதான வசதிகள் யாவும் நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இம்முறை அடியவர்களுக்கு புதிய அன்னதான மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. (எ-10)

# 'ஹெல்மெற்' இன்றி பயணிப்பதற்கு தண்டம் விதிப்பது இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன்11

தலைக்கவசம் (ஹெல்மெற்) அணியாது மோட்டார் சைக்கிளில் பயணிப்பதற்கு தண்டப்பணம் அறவிடும் நடைமுறையை யாழ். பொலீஸார் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர்.

தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுதது வோர் மற்றும் அதில் பயணிப் பவர்களிடம் தண்டப்பணம் அறவிடும் நடவடிக்கையை யாழ்.நகரத்திலும் மற்றும் ஏனைய இடங்களிலும் பொலீஸார் கடந்த சில நாள்களாக நடைமுறைப்படுத்தி வந்தனர்.

தலைக்கவசம் அணியும் நடைமுறையை கடைப்பிடிக்குமாறு திடீரென அறிவுறுத்தப்பட்டமையால் மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

அதனையடுத்து இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா, வட பிராந்திய பிரதிப் பொலீஸமா அதிபர் கீர்த்தி கஜநாயக்கவுடன் நேற்று தொடர்பு கொண்டு பேச்சு நடத்தினார்.

அவரது கோரிக்கையை அடுத்து தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் பயணிப்போருக்கு தண்டப் பணம் அறவிடும் நடைமுறை தற்காலிகமாக மூன்று மாதங்களுக்கு இடை நிறுத்தப்படுவதாக வட பிராந்தியப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் அறிவிததுள்ளார் என மாவை எம்பி. தெரிவித்தார். (எ-9)

ஜப்பான் தென்கொரியா

## உலகக் கிண்ண கால்பந்து

2002 FIFA WORLD CUP KOREA JAPAN

31.05.2002 - 30.06.2002



பெல்ஜியம் மற்றும் ருனிஷிய அணி வீரர்களிடையிலான மோதல்

# போர்த்துக்கல் வீரர் ஹற்றிக் சாதனை!

சியோல்,ஜூன11

ஜப்பான் மற்றும் தென்கொரியாவில் நடந்து வரும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் நேற்று நடந்த மூன்று ஆட்டங்களில் இரண்டு வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. மற்றோர் ஆட்டத்தில் போர்த்துக்கல், பொலன்டை வென்றது. அந்த அணி வீரர் பலுலிட்டா ஸ்கோரெட் மூன்று கோல்களை அடித்து ஹற்றிக் சாதனை நிகழ்த்தினார்.

முதல் ஆட்டம் ருனிஷியாவுக்கும் பெல்ஜியத்துக்கும் இடையில் ஜப்பானில் இடம்பெற்றது. ஆட்டம் ஆரம்பித்த 13ஆவது நிமிடத்தில் பெல்ஜியம் வீரர் மார்க் வில்மோட்ஸ் அபாரமாக ஆடி ஒரு கோலை அடித்தார். ஆடுத்த 4ஆவது நிமிடத்தில் ருனிஷிய அணிக்குக் கிடைத்த கட்டுப்பாடற்ற உதையை (Free kick) அதிரடியாகக் கோலாக்கி அதிர்ச்சியை ஏற்படுத்தினார் அந்த அணியின் பின்கள வீரர் ரவூப் பௌஸானி.

முன்பாதி ஆட்டத்தில் முன்னேறித் தாக்குதல் ஆட்டம் நடத்திய ருனிஷிய அணியை, பின்பாதி ஆட்டத்தில் தற்காப்பு நிலையில் மட்டுமே ஆடும் நிலைக்கு பெல்ஜியம் தள்ளியது. பின் பாதி ஆட்டத்தில் அலையலையாக வந்து ருனிஷிய கோல் கம்பங்களை முற்றுகையிட்டு தாக்குதல் ஆட்டம் நடத்தினர் பெல்ஜியம் வீரர்கள். ஆனால், ருனிஷிய பின்கள வீரர்கள் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு பெல்ஜியத்தின் முயற்சிகளை வெற்றிகரமாக முறியடித்தனர். இறுதியில் ஆட்டம் 1-1 என்ற அடிப்படையில் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

இரண்டாவது ஆட்டம் போட்டியை நடத்தும் நாடுகளில் ஒன்றான தென்கொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நடந்தது. 1-1 என்ற கோல் அடிப்படையில் இந்த ஆட்டமும் சம நிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தின் 24ஆவது நிமிடத்தில் அமெரிக்க வீரர் சிலிண்ட் மத்தீஸின் நேர்த்தியான உதை அந்த அணிக்கு ஒரு கோலைப் பெற்றுத் தந்ததுடன் ஆட்டம் சூடு பிடிக்க ஆரம்பித்தது. தென்கொரிய வீரர்கள் கோல் அடிப்பதற்குப் பகீரதப்பிரயத்தனம் செய்தவண்ணமிருந்தனர். முன்பாதி ஆட்டம் முடிவடைவதற்கு 5நிமிடங்கள் இருக்கையில் தென்கொரிய அணிக்கு பெனால்டி உதை ஒன்று கிடைத்தது. ஆனால், தென்கொரியாவின் லி உல் - யுங் அடித்த அந்த பெனால்டியை அமெரிக்கக் கோல்காப்பாளர் பார்ட் பிரடெல் திறமையாகத் தடுத்தார். பின் பாதி ஆட்டம் ஆரம்பமான 2 நிமிடங்களிலும் தென்கொரிய அணி கோல் போட எத்தனித்தது. அதனையும் அவர் திறம்படத் தடுத்தார். ஆனால், ஆட்டத்தின் 78ஆவது நிமிடத்தில் தென்கொரியாவின் அன் யுங் - ஹவான் தலையால் மோதி ஒரு கோலைப் பெற்று தன் அணியைத் தோல்வியில் இருந்து காப்பாற்றினார்.

மூன்றாவது ஆட்டம் போர்த்துக்கலுக்கும் பொலண்டுக்கும் இடையில் இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் 4-0 என்ற கோல் அடிப்படையில் போர்த்துக்கல் அணி வெற்றிபெற்றது. அந்த அணி வீரர் பலுலிட்டா ஸ்கோரெட் மூன்று கோல்களை அடித்து ஹற்றிக் சாதனை ஏற்படுத்தினார். இந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் ஏற்படுத்தப்பட்ட 2ஆவது ஹற்றிக் சாதனை இதுவாகும். ஆட்டம் ஆரம்பித்த 14ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணியின் பலுலிட்டா முதலாவது கோலை அடித்தார். பின்னர் ஆட்டத்தின் பின் பாதியில், 65ஆவது நிமிடத்திலும் 77ஆவது நிமிடத்திலும் அவர் கோல்களை அடித்தார். ஆட்டத்தின் 87ஆவது நிமிடத்தில் போர்த்துக்கலின் துணை ஆட்டக்காரர் (Substitute) ருய்கொஸ்ரா மேலும் ஒரு கோலை அடித்து அணியின் வெற்றியை மேலும் உறுதிப்படுத்தினார். இறுதியில் 4-0 என்ற கோல் அடிப்படையில் போர்த்துக்கல் வெற்றி பெற்றது. (ம)



மூன்று கோல்கள் அடித்த மகிழ்ச்சியில் பலுலிட்டா ஸ்கோரெட்.

## இன்று நடக்கும் ஆட்டங்கள்

சியோல்,ஜூன்11

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள், போட்டி நடைபெறும் நாடு, நேரம்(உள்ளூர் நேரம்) என்பன வருமாறு:-

★ டென்மார்க் எதிர் பிரான்ஸ் (கொரியா - பகல் 12.30)

★ செனகல் எதிர் உருகுவே (கொரியா - பகல் 12.30)

★ கெமரூன் எதிர் ஜேர்மனி (ஜப்பான் - பகல் 5.30)

★ சவூதிஅரேபியா எதிர் அயர்லண்ட் (ஜப்பான் - மாலை 5.30) (ம)



உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் ஜப்பான் அணியிடம் ரஷ்ய அணி தோற்றதனால் மொஸ்கோவில் ரசிகர்கள் கலவரத்தில் ஈடுபட்ட காட்சி.

# இஸ்ரேலிய டாங்கிப் படையினர் ரமழா நகருக்குள் புகுந்தனர்!

லண்டன்,ஜூன்11

மேற்குக்கரைப் பலஸ்தீன நகரான ரமழாவில் நேற்று டாங்கிகள் சகிதம் இஸ்ரேலியப் படையினர் நுழைந்தனர். கடந்த நான்கு நாள்களில் ரமழாவுக்குள் இஸ்ரேலிய இராணுவம் நுழைவது இது இரண்டாவது தடைவையாகும்.

ரமழாவில் இஸ்ரேலிய இராணுவம், பலஸ்தீனர்களின் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டதாகவும் -

பலஸ்தீன துப்பாக்கிதாரிகளுக்கும், இஸ்ரேலியப் படைகளுக்கும் இடையே பல மணித்தியாலங்கள் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றதாகவும் - நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

தம்மால் தேடப்படும் பலஸ்தீனத் தீவிரவாதிகளை கைதுசெய்யவும், அவர்களது வெடிபொருள் கிடங்கைக் கண்டுபிடிக்கவுமே தாம் ரமழாவுக்குள் நுழைந்தாக இஸ்ரேலியப் படையினர் தெரிவித்தனர்.

ரமழாவில் இடம்பெற்ற மோதலில் பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பிட்ட நேரம் மட்டுமே ரமழாவில் தங்கியிருந்த இஸ்ரேலியப் படையினர், ஏழு பலஸ்தீனத் தீவிரவாதிகளைக் கைதுசெய்ததாக இஸ்ரேலிய வானொலி தெரிவித்தது.

இதேசமயம், காஸா நிலப்பரப்பில் ஜபாலியா அகதிமுகாமில் குண்டு ஒன்று வெடித்ததில் முப்பது பலஸ்தீனர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் அனைத்தும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷை இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் சந்திக்க இருக்கும் சமயத்தில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)



கிழக்கு ஜெருஸலேமில் இஸ்ரேலியப் பொலீஸாருக்கும் பலஸ்தீன இளைஞர்களுக்கும் இடையே கைகலப்பு இடம்பெற்ற போது எடுத்த படம்.

# இந்தோனேஷிய தலைநகரில் குண்டு வெடித்து 5 பேர் காயம்

ஜகார்த்தா,ஜூன்11

இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள இரவு விடுதிக்கு வெளியே குண்டு வெடித்ததில் ஐவர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் நிலை மிகக் கவலைக்கிடமாக இருக்கின்றது.

நேற்று முன்தினம் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. உள்ளூரில் தயாரிக்கப்பட்ட குண்டே வெடித்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

குண்டு வெடித்த இடம் சீனர்கள் அதிகம் வசிக்கும் இடமாகும். சீனர்களுக்கு எதிரான சக்தியே இந்தக் குண்டு வெடிப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. 1998 இலும் இந்தப் பகுதியில் சீனர்களுக்கு எதிராகப் பெரும் வன்முறைகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பங்களாதேஷ் பல்கலையில் மாணவர் கோஷ்டி மோதல்

## இடையில் சிக்கி மாணவி பலி!

டாக்கா,ஜூன்11

பங்களாதேஷ் பொறியியல் பல்கலைக்கழகத்தில் இரு குழுவினருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒரு மாணவி கொல்லப்பட்டார்.

இரு மாணவர் குழுக்களிடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சண்டையின் இடையில் சிக்கியே அந்த மாணவி உயிரிழந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

பங்களாதேஷ் ஆளும் கட்சிக்கு ஆதரவான இரு மாணவர் குழுக்களிடையே சண்டை இடம்பெற்றதாகப் பொலீஸார் கூறினர்.

இரு தரப்புக்களும் சுமார் ஒரு மணி நேரம் இயந்திரத் துப்பாக்கிகளால் மாறிமாறித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவண்ணம் இருந்ததாக சம்பவத்தை நேரில் கண்ட மாணவர்கள் தெரிவித்தனர்.



தற்போது பல்கலைக்கழகத்தைச் சுற்றி பொலீஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். ஆனாலும் பல்கலைக்கழகம் பாதுகாப்பான ஓர் இடம் என நாம் கருதவில்லை என்று நூற்றுக் கணக்கான மாணவர்களும் ஆசிரியர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# இந்திய - பாக். போர் எதிரொலி; அகதிமுகாம் அமைக்கிறது பிரிட்டன்!

லண்டன்,ஜூன்11

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போர் மூண்டால், அந்த இரு நாடுகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான அகதிகள் பிரிட்டனுக்கு வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் பிரிட்டிஷ் அரசு அகதி முகாம்களை அமைத்து வருகிறது.

இதுகுறித்து பிரிட்டிஷ் உள்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறுகையில் -

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போர் வெடித்தால் சுமார் ஒருலட்சம் முதல் 10 லட்சம் பேர் பிரிட்டனுக்கு அகதிகளாக வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த இரு நாடுகளிலும் பிரிட்டிஷ் கடவுச்சீட்டு உள்ளவர்கள் 21ஆயிரம் பேர் வசிக்கிறார்கள். ஒவ்வொரு நபரையும் நம்பி அவரது குடும்பத்தினர் 5பேர் இருப்பதாக கணக்கிட்டால் ஒருலட்சம் பேர் பிரிட்டனில் தங்கும் உரிமை பெற்றவர்கள் ஆவர்.

போர் ஆரம்பித்தால் இவர்களுடன் மேலும் பலர் அகதிகளாகத் தஞ்சம் கோரி பிரிட்டனுக்கு வரக்கூடும். அதனாலேயே முன் நடவடிக்கையாக அகதிமுகாம்களை அமைத்து வருகிறோம்' என்று அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், இந்தியா மற்றும் பாகிஸ்தானில் உள்ள பிரிட்டிஷ் தூதரகங்களில் ஏராளமானவர்கள் தொடர்பு கொண்டு பிரிட்டனுக்குச் செல்வது, அகதி அந்தஸ்து பெறுவதற்கான தகுதிகள் போன்ற விடயங்கள் குறித்து விசாரிப்பதாகக் கூறப்படுகிறது.

இதனை அடுத்து இரு நாடுகளில் இருந்தும் ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான அகதிகள் பிரிட்டனுக்குள் நுழைந்தால் அவர்களைச் சமாளிப்பது தொடர்பாக பிரிட்டிஷ் அதிகாரிகள் திட்டங்களை வகுத்து வருகிறார்கள்.

அவற்றில் ஒரு கட்டமாகவே பிரிட்டிஷ் விமானப்படையின் பழைய தளங்களில் இரண்டு, அகதி முகாம்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்த இரு முகாம்களிலும் சுமார் ஐயாயிரம் பேரை தங்க வைக்க முடியும். அகதிகளின் எண்ணிக்கை அதிகமானால் மேலும் 10 முகாம்கள் அமைக்கப்படும் என்று உள்துறை அமைச்சக அதிகாரி தெரிவித்தார். (ஓ)

# தவறான சிகையலங்காரத்துக்கு நஷ்டஈடு கோரிய பெண்மணி

ஹொங்கொங்,ஜூன்11

ஆங்கிலத் திரைப்பட நடிகை போன்று கூந்தலை அலங்கரித்து விடுமாறு கேட்டதற்கு அலங்கோலமாக தனக்கு சிகை அலங்காரம் செய்து தனது தலைமயிரைச் சேதப்படுத்திவிட்டதாக சிகை அலங்கரிப்பாளர் ஒருவருக்கு எதிராக நஷ்டஈடு கோரி பெண் ஒருவர் வழக்குத் தொடர்ந்தார்.

இந்தச் சம்பவம் அண்மையில் ஹொங்கொங்கில் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

'ஹொங்கொங்கைச் சேர்ந்த சூலியூ என்ற பெண், சிகைஅலங்கரிப்பு நிலையம் ஒன்றுக்குச் சென்று ஆங்கிலத் திரைப்பட நடிகை ஜூலியா றொபேட்ஸின் சிகை அலங்காரம் போன்று தனது கூந்தலை அலங்கரிக்கும்படி கேட்டார். அலங்காரமும் நடைபெற்றது.

ஆனால், முடிவில் தன்னைக் கண்ணாடியில் பார்த்த அந்தப் பெண்ணுக்கு பெரும் கோபம் ஏற்பட்டது.

'நான் கேட்டது ஹொலிவூட் நடிகையின் அலங்காரம். ஆனால், இப்போது நான் ஒஸாமா பின்லேடனைப் போல் இருக்கிறேன். எனது தலைமயிர் சேதப்படுத்தப்பட்டுள்ளது' எனக் கூறிய அப்பெண் 6ஆயிரத்து நானூற்றுப் பத்து அமெரிக்க டொலர்கள் நஷ்டஈடு கோரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். வழக்கை விசாரணை செய்த நீதிவான் போதிய ஆதாரங்கள் இல்லை எனக் கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

கோபங்கொண்ட அப்பெண் நீதிவான் தன்மீது இரக்கம் காட்டவில்லை எனவும் - தீர்ப்பு பிழையானது என்றும் - கூறி நீதிமன்றத்தை விட்டு வெளியேற மறுத்துவிட்டார்.

'சிகையலங்கரிப்பால் தலைமயிர்கள் பலத்த சேதமடைந்துள்ளன' என்றே மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தலைமயிர்கள் எந்த விதத்திலும் சேதமடையவில்லை. அலங்கரிப்பு முறைதான் வித்தியாசமாக உள்ளது. இதனாலேயே வழக்குத் தள்ளுபடியானது' என விளக்கம் கொடுத்தார் நீதிவான்.

ஆனால், அப்பெண் மேலும் அடம்பிடிக்கவே பலவந்தமாக ஓர் அம்புலன்ஸில் ஏற்றப்பட்டு மனநல மருத்துவமனைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். (ஓ-9)

# பழங்குடித் தலைவர்கள் மாநாடு ஆப்கானில் இன்று ஆரம்பம்

காபூல்,ஜூன்11

ஆப்கானிஸ்தானில் செல்வாக்கு மிக்க பழங்குடி இனத்தலைவர்களின் அமைப்பான 'லோயா ஜிர்கா'வின் மாநாடு தலைநகர் காபூலில் இன்று நடைபெறுகிறது. நேற்று ஆரம்பிப்பதாக இருந்த இந்த மாநாடு ஆப்கானிஸ்தானின் பல பகுதிகளில் இருந்தும் பழங்குடியினத் தலைவர்கள் வந்து சேர்வதில் ஏற்பட்ட கால தாமதம் காரணமாக இன்று தொடங்குகிறது.

இன்று தொடக்கம் அடுத்துவரும் 6 நாள்களுக்கு நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ள இந்த மாநாட்டில், நாட்டின் அதிபர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்.

தற்போது இடைக்கால அரசின் தலைவராக உள்ள ஹமீட் ஹர்சேயே மீண்டும் நாட்டின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆயிரத்து 51 உறுப்பினர்களைக் கொண்ட 'லோயா ஜிர்கா'வின் மாநாட்டை முன்னாள் மன்னர் ஜாகிர் ஷா தொடக்கி வைப்பார். அதனைத் தொடர்ந்து அடுத்த இரு ஆண்டுகளுக்கு நாட்டை நிர்வகிக்கும் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.



காபூலில் சோதனையிடும் ஆப்கான் படையினர்

# ஜெயலலிதா, சசிகலா மீதான கடைசி வழக்கும் கைவிடப்படும்?

சென்னை,ஜூன்11

தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் அவரது தோழி சசிகலா ஆகிய இருவர்மீதும் கடந்த 11 வருடங்களாக தொடரப்பட்டு நடந்து வரும் அந்நியச் செலாவணிச் சட்ட மீறல் வழக்கு கைவிடப்படவுள்ளதாக மத்திய அரசின் அமுலாக்கல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1991ஆம் ஆண்டு ஜெயலலிதா 3 லட்சம் அமெரிக்க டொலர்களையும் சசிகலா 2 லட்சம் அமெரிக்க டொலர்களையும் வெளிநாட்டில் உள்ள இனம்தெரியாத ஒருவரிடமிருந்து பெற்றிருந்தனர். இது தமக்கு அன்பளிப்பாகக் கிடைத்தது தாக வருமானவரி அதிகாரிகளிடம் அவர்கள் தெரிவித்திருந்தனர். ஆனால், இதனை ஏற்க மறுத்த வருமானவரித் துறை, அவர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டின்பேரில் வழக்குத் தொடர்ந்திருந்தது.

இந்த வழக்கு விசாரணை நீதிமன்றில் நடைபெற்றுவந்தது.

இதற்கிடையில்,

அந்நியச் செலாவணிச் சட்டம் கடந்த 2000ஆம் ஆண்டு கைவிடப்பட்டது. அப்போது அடுத்துவரும் 2 வருடங்களுக்குள் அந்நியச் செலாவணி வழக்குகளின் முடிவு எட்டப்பட்டுவிட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் கடந்த மே மாதம் 31ஆம் திகதிக்குள் இந்த வழக்குகள் முடிவுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், அமுலாக்கல் பிரிவு அதிகாரிகள் விசாரணை தொடர்வதாக தெரிவித்து வந்ததால் வழக்கு முடியவில்லை. இதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது ஜெயலலிதா எதிர்கொள்ளும் ஒரே வழக்கு இது என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6-9)

# லஞ்சம் கொடுப்பதில் ரஷ்யா, சீனா முன்னணி

மொஸ்கோ,ஜூன்11

வளரும் நாடுகளில் தொழில் மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக அந்த நாடுகளின் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்பதில் ரஷ்யாவும் சீனாவும் முன்னணியில் உள்ளன.

லஞ்சம் கொடுப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சர்வதேச ஆய்விலேயே இந்த விவரம் தெரியவந்துள்ளது.

இந்த இரு நாடுகளுக்கு அடுத்தபடியாக தாய்வானும், தென்கொரியாவும் பிறநாடுகளுக்கு அதிகமாக லஞ்சம் கொடுத்துத் தமது வர்த்தக நலன்களைப் பேணுகின்றன.

அமெரிக்கா தனது நாட்டைச் சேர்ந்த தனியார் தொழில் நிறுவனங்களுக்காக ராஜதந்திர மட்டத்திலும் நிதி உதவிகள் மூலமாகவும் பின்தங்கிய நாடுகளை அடிபணிய வைக்க முயற்சிப்பது வழக்கம்.

இதேபோன்று பிரான்ஸ், பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகளும் தத்தமது நாட்டு நிறுவனங்களுக்காக பின்தங்கிய நாடுகளை வற்புறுத்துவது வழக்கமாகும். இந்த விவரங்கள் ஆய்வின்மூலம் தெரியவந்துள்ளன. (ஓ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 10 ✦ 01 ✦ 1917



உதிர்வு 13 ✦ 05 ✦ 2002

## அமரர் கோணர் கந்தையா

எங்கள் குடும்பத் தலைவர் கோணர் கந்தையா இவ்வுலகை விட்டு நீங்கியதை அறிந்தவுடன் தமது அனுதாபத்தைத் தெரிவித்தவர்கள், தொலைதூரத்திலிருந்து முக்கிய உறவுகள் வரும்வரை உடனிருந்து ஆறுதல்கூறி உதவி புரிந்தவர்கள், இறுதிக்கிரியைகளின்போது முன்னின்று நடத்தியவர்கள், எல்லாத் தேவைகளையும் குறிப்பறிந்து உடனுக்குடன் உதவி புரிந்தவர்கள் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்கள், எழுத்து மூலமும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்கள் மற்றும் பல்வேறு வகையில் எங்கள் ஆற்றொணாத் துன்பத்தில் பங்குகொண்டு எமக்கு ஆதரவளித்த அனைவருக்கும் எமது உள்ளம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.*

*33, 2 ஆம் விதானை ஒழுங்கை,*
*சுண்டிக்குளி.* (4743)

*பிரிவால் துயருறும்:*
**குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் இதய அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
த.சுதாகர் அவர்களின் அன்புச் சகோதரர்

## தம்பிராசா சதீஸ்சந்திரன்

அவர்கள் 12.05.2002 அன்று காலமாகிவிட்டார். அமரருக்கு எமது இதய அஞ்சலியைச் செலுத்தி கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம. அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

*யாழ்ப்பாணம்.* (4741) - கடற்றொழில் பரிசோதகர்கள்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### முன்னாள் துணைவேந்தர்
### பேராசிரியர் அ.துரைராசா
### நினைவுப் பேருரை

*காலம்:* இன்று (11.06.2002) செவ்வாய்க்கிழமை பி.ப.3.00மணி
*இடம்:* கைலாசபதி கலையரங்கம், யாழ்.பல்கலைக்கழகம்
*நினைவுப் பேருரை நிகழ்த்துபவர்:*
பேராதனைப் பல்கலைக்கழக பொறிசார் எந்திரவியற் துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவசேகரம்
*தலைப்பு:* "தாய்மொழிக் கல்விக்கான நியாயம் - நேற்று இன்று நாளை."
*ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.*

(C/22467) - துணைவேந்தர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது நலன்புரிச் சங்க நிர்வாக உறுப்பினர்
திரு.தே.அருள்நாயகம் அவர்களின் அன்புத் தந்தையார்

## குருசுமுத்து தேவசகாயம்

அவர்கள் 08.06.2002 அன்று காலமாகிவிட்டார். பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*வேலணை கிழக்கு,*
*வேலணை - 04* (4744)

**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்கம்.**

## மடத்தடி வீடுகளில் இருந்து படையினர் வெளியேறினர்!

தென்மராட்சி,ஜூன்11

சாவகச்சேரி வடக்கு, மடத்தடிப் பகுதி வீடுகளில் கடந்த இரண்டு வருடங்களாக நிலைகொண்டிருந்த படையினர் நேற்றுமுன்தினம் இரவுடன் முற்றாக வெளியேறினர்.

நேற்றுக்காலை இப்பகுதி மக்கள் தமது வீடுகளில் மீளக்குடியமரும் பொருட்டு துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்ததைக் காணமுடிந்தது.

படையினர் நிலைகொண்டிருந்த அனைத்து வீடுகளிலும் தளபாடங்கள முதல் மின்சார வயர்கள் வரை அனைத்தும் அகற்றப்பட்டுக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேற்றக்கோரி கடந்தவாரம் குடியிருப்பாளர்களால் தென்மராட்சி பிரதேசசெயலரிடம் மகஜர் கையளிக்கப்பட்டமை தெரிந்ததே. (எ-117)

## யாழ்.ஆஸ்பத்திரியில் கைப்பை மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்11

யாழ்.போதனா வைத்தியசாலைப் பகுதியில் கண்டெடுத்ததாகக் கூறி விசேட அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டைகளுடனான கைப்பை ஒன்று நிர்வாகத்திடம் ஒப்படைக கப்பட்டுள்ளது.

பலாலி தெற்கு, வசாவிளானில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை சந்தாதோட்டம் பகுதியில் வசிக்கும் தம்பன் சின்னக்கிளி என்ற பெண்ணுடைய அடையாள அட்டைகளே கைப்பையுடன் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு ஆஸ்பத்திரி நிர்வாகப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (எ-15)

## திருமலை - மூதூர் இடையே புதிய படகுசேவை

திருகோணமலை.ஜூன்11

திருகோணமலைக்கும் மூதூருக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபடுத்துவதற்கென 'ஓவர் சியஸ்-3' என்ற படகு வாடகைக்கு அமர்த்தப் பட்டுள்ளது.

இதுவரை காலமும் மேற்படி சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த 'சேருவில- II' என்ற படகு அண்மையில் பாறை ஒன்றுடன் மோதி பலத்த சேதமடைந்ததை அடுத்தே தற்போது புதிய படகு வாடகைக்கு அமர்த்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நூறுபயணிகளை ஏற்றிச்செல்லக் கூடிய இந்தப் படகு துறைமுகங்கள் அதிகர சபையின் திரு கோணமலை 'மட்கோ' பொறியியலாளர் அலுவலகத்தில் சிறிய திருத்த வேலைகளை முடித்துக்கொண்டு கடந்த 9ஆம் திகதிமுதல் தனது சேவையை ஆரம்பித்துள்ளது. (எ)

## மெய்வன்மைப் போட்டி

ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யூனியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் அ.சிறிகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டிகளில் வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்திரனராகவும், சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் ஆனைக்கோட்டை பங்குத் தந்தை ப.அன்ரனிப்பிள்ளை அடிகளார், இல்லப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (எ)

## ஓய்வூதியம் இன்று கிடைக்கும்

தென்மராட்சி,ஜூன்11

தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர்களுக்கான ஜூன் மாத ஓய்வூதியம் இன்று அந்தந்த வங்கிகளில் வழங்கப்படுமென பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.செயலகத்தில் மீனவர் மறியல் போராட்டம் நடத்தியபோதிலும் ஓய்வூதியம் இன்று வழங்க அந்தந்த பிரதேச செயலகங்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஓய்வூதி வவுச்சர்கள் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# பொது நிகழ்வுகளில் சில...



'காளான்' தொடர்பான கருத்தரங்கு ஒன்று அண்மையில் மானிப்பாய் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

டாக்டர் திருமதி மாலதிறமணி கருத்துரை வழங்குவதையும், கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (எ)



பிரபல சமூகசேவையாளரும், வர்த்தகருமான வி.ஜே.ஞானக்கோனுக்கு அண்மையில் பளைப்பிரதேச செயலகத்தில் பச்சிலைப்பள்ளி மக்களால் பொது வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வரவேற்பளிக்கப்பட்ட வர்த்தகர் வி.ஜே.ஞானக்னோன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பிரதேச செயலர் எஸ்.புத்திசிகாமணி மற்றும் அலுவலக உத்தியோகத்தர் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ)




யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் 125ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட 15 வயதுக்கு உட்பட்டோருக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

மேற்படி போட்டியில் வெற்றிபெற்ற வில்ஸ் வி.கழக அணிக்கான பரிசிலினை யாழ். ஆயரின் செயலாளர் அருட்திரு. எமில்போல் அடிகளார் கழக உறுப்பினர் ஒருவரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் காணப்படுகின்றனர். (எ-17)



யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில், அண்மையில் நல்லூர் முருகன் சனசமூகநிலைய முன்றிலில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

சிரமதான நிகழ்வின் இறுதியில் கழக உறுப்பினர்களுடன் நிலைய உறுப்பனர்கள் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது. (எ)

உதயன்

# பிரதமரின் இரண்டாவது இந்திய விஜயம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு உத்தியோகபூர்வவிஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார்.

அவர் ஏற்கனவே பிரசல்ஸ் சென்றார். அங்கிருந்து லண்டன் சென்று பிரிட்டிஷ் தலைவர்களையும் சந்தித்துப் பேசிவிட்டுத் திரும்பினார்.

அடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்குச் செல்லவிருக்கிறார்.

பிரதமர் இப்போது இந்தியாவுக்கு மேற்கொண்டிருப்பது இரண்டாவது உத்தியோகபூர்வவிஜயம்.

· ஆறுமாதங்களுக்கு முன்னர் அவர் பதவியேற்றதும் தமது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டது எமது அண்டை நாடான இந்தியாவுக்குத்தான்.

இம்முறை பகவான் சத்யசாயி பாபாவின் ஆசீர்வாதத்துடன் இந்திய அரசியல் தலைவர்களைச் சந்திக்கச் சென்றிருக்கிறார்.

அதனால் இம்முறை இந்திய விஜயம் மிகவும் வெற்றிகரமாக அமைந்து, நல்ல பயனைத் தரும் என்ற நம்பிக்கை பிரதமருக்கு மட்டுமன்றி உலகெங்கும் உள்ள கோடிக்கணக்கான சாயி பக்தர்களுக்கும் உண்டு.

பிரதமர் ரணில் உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று இலங்கையின் சமாதான முயற்சிகள் பற்றி அந்த நாடுகளின் தலைவர்களுக்கு விளக்கமாக எடுத்துக்கூறிவருகிறார். முயற்சி வெற்றிபெறுவதற்கு அந்த நாடுகளின் உதவியையும் கோரிவருகிறார்.

இப்போது புதுடில்லிக்குப் புறப்பட்டிருக்கும் பிரதமர், இலங்கையின் சமாதான முயற்சிகள் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை அங்கேயும் இந்தியத் தலைவர்களுக்கு நேரடியாகவே எடுத்துக் கூறுவார். அவர்களது உதவி, ஒத்துழைப்பு ஆகியவற்றைக் கோருவார்.

புதுடில்லியில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் பிரதமர் சந்திக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கைதுசெய்து இந்தியாவுக்கு அவரை நாடுகடத்த வேண்டும், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் முக்கிய சந்தேக நபரான அவரை நீதிமன்றில் நிறுத்தவேண்டும் என்பது ஜெயலலிதாவின் நிலைப்பாடு. அதற்கேற்ப தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானமும் நிறைவேற்றினார்.

பிரபாகரனைக் கைதுசெய்து இந்தியாவுக்கு அனுப்புவதானால் தமிழீழ விடுதலைப் புலிகளோடு சமாதானப் பேச்சு நடத்த முடியுமா? சமாதானததை ஏற்படுத்த முடியுமா? இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இயலுமா? இப்படியெல்லாம் ஜெயலலிதாவிடம் பிரதமர் ரணில் கேட்பாரோ என்னவோ!

புதுடில்லியில் பிரதமர் வாஜ்பாயுடனும் மற்றும் தலைவர்களுடனும் இலங்கையில் சமாதான முயற்சி பற்றி மட்டுமல்லாமல் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உடன்படிக்கை, திருகோணமலை எண்ணெய்க்குதத் தொகுதி ஒன்றை இந்தியாவுக்குக் குத்தகைக்குக் கொடுப்பது, இலங்கையின் விவசாயத்துறைக்கு இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெறுவது, இலங்கை - இந்தியப் பாலம் அமைப்பது பற்றியெல்லாம் பிரதமர் பேசுகிறார்; ஒப்பந்தங்களும் செய்துகொள்ளஇருக்கிறார்.

சமாதான முயற்சிகளில் தான் பங்களிப்புச் செய்யப்போவதில்லை என்று இந்தியா ஆரம்பத்தில் அறிவித்திருந்தும்கூடப் பின்னர் இடைக்கால நிர்வாகம் அமைப்பது தொடர்பான சட்ட ஆக்கங்களைத் தயாரிப்பதில் நிபுணத்துவ உதவி வழங்க முன்வந்திருக்கிறது.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இன்றைய தேவைகளுக்கேற்ற மாற்றங்களைச் செய்தல், விவசாயத்துறை உதவிகளை வழங்குதல், பாலம் அமைத்தல் போன்ற விஷயங்களில் பிரச்சினை இல்லை. திருகோணமலை எண்ணெய்க்குத விவகாரத்தில் தமிழ்க்கட்சிகளிடையேயும் தமிழ்மக்களிடையேயும் பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளதால் இப்போது ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்குப் பிரதமர் ஒன்றுக்குப் பல தடவைகள் யோசிக்கவே செய்வார்.

சாயி விசுவாசம் அவரை நல்வழி நடத்தட்டும்.

# குற்றவியல் நீதிமன்ற உடன்பாட்டில் இலங்கை கையெழுத்திடுவது அவசியம்

## ஆசிய மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்து

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் குறித்த உடன்பாட்டில் இலங்கை ஒப்பமிடவேண்டுமென்று ஹொங்கொங்கிலிருந்து செயற்படும் ஆசிய மனிதவுரிமை ஆணைக்குழு கேட்டுள்ளது. மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலைகள், போர் குற்றங்கள் போன்றவற்றில் குற்றஞ்சாட்டப்படும் எந்தவொரு நாடும் நீதியின்முன் நிறுத்தப்படும் என்று உடன்படிக்கை தெரிவிக்கின்றது.

எதிர்வரும் ஜூலை முதலாந்திகதி தொடக்கம் இந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வருகிறது.

இதுதொடர்பாக ஆணைக்குழு மேலும் தெரிவிப்பதாவது:- இந்த உடன்பாட்டில் இலங்கை இதுவரை கையெழுத்திடவில்லை.

இன்றைய சூழ்நிலையிலும் இலங்கை இந்த சர்வதேச உடன்பாட்டில் கையொப்பமிடவில்ல; அங்கீகரிக்கவுமில்லை. தான் ஒரு உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருப்பதைக் காரணங்காட்டி முன்னைய பொ.ஐ.மு. அரசு கையெழுத்திட மறுத்துவந்தது.

எவ்வாறாயினும், இலங்கை உடன்பாட்டின் ஒரு தரப்பாக முன்வரமறுத்தமைக்கு இது காரணமாக இருக்கலாம். ஆனாலும் போர் தொடர்பான சட்டங்களை பின்பற்றுவதற்கு இலங்கை தன்னை அர்ப்பணித்திருக்க முடியும்.

இன்று போர்நிறுத்தமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு சமாதானத்திற்கான முயற்சிகளில் அரசு இறங்கியிருப்பதனால் இந்த உடன்பாட்டில் ஒப்பமிட இலங்கைக்கு போதியளவு காரணங்கள் உள்ளன.ஒரு தசாப்த காலமாக அழிந்து போன நற்பெயரை மீட்டெடுக்க அதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். உடன்பாட்டில் கையெழுத்திடுவது இலங்கைக்கு கௌரவத்தையும் மதிப்பையும் ஏற்படுத்தும். - இவ்வாறு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஒ)

# பத்திரிகைகள் படுமோசம்; அவற்றை நம்பவேண்டாம்!

## கட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி சீற்றம்

கொழும்பு,ஜூன்11

"அதிகாலையில் படுக்கையறையிலேயே பத்திரிகைகளைக் கையில் எடுத்துக்கொள்வேன். ஆனால் அவற்றை நேரே குப்பைத் தொட்டியில் வீசி எறிந்துவிடுவேன். 'இந்தப் பத்திரிகைகள் இருக்கின்றனவே அவற்றை நம்பவேண்டாம்.''

பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு பத்திரிகைகளைச் சாடினார் என்று கூறப்படுகிறது.

ஆனால், பத்திரிகைகள் மீது ஏன் இந்தக் காழ்ப்புணர்ச்சி என்று ஜனாதிபதி அங்கு கூறவில்லை. பத்திரிகைகள் அவரது கட்சிமீது அழுத்தங்களை உண்டுபண்ணுவதாக அவர் எண்ணுவதே இதற்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

ஆயினும் பத்திரிகைகளுக்கான செய்திகள் மற்றும் செய்திகளுக்கான மறுப்பறிக்கைகள் என்பவை பிரதமர் செயலகத்தைவிட ஜனாதிபதி செயலகத்திலிருந்தே அதிகம் அனுப்பப்படுகின்றன.

ஜனாதிபதி அந்தக் கூட்டத்தில் மேலும் கூறியதாவது:-

பொ.ஐ.முன்னணியிலிருந்து 7 எம்.பிக்கள் அரசின் பக்கம் தாவுவதற்கு ஆயத்தமாகவிருக்கின்றனர். அவர்கள் துரோகிகளாக முத்திரை குத்தப்படுவர். பிற்கால வாழ்க்கையில் அவர்கள் வெற்றிபெறமாட்டார்கள்.

இந்தமாதிரியான சக்திகளின் வெளியேற்றத்தால் எமது கட்சி மேலும் வலுப்பெறும். - என்றார் அவர்.

இந்தக் கூட்டத்திற்கு ரொனிடிமெல், ரிச்சர்ட் பத்திரன, ஏ.எச்.எம்.பௌஸி, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, எஸ்.பி. நாவின்ன ஆகியோர் வருகைதரவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கூட்டத்திற்கு வந்திருந்தபோதும் திருமண வீட்டுக்குச் செல்வதாகக் கூறி கூட்டத்தின் ஆரம்பத்திலேயே சென்றுவிட்டார்.

கூட்டத்தில் பேசியபோது, "தற்போதைய சமாதான முயற்சிகள் எந்நேரத்திலும் முறிவடையலாம் எனத் தெரிகிறது. பிரதமர். லண்டனுக்குச் சென்றிருந்தபோது புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால் அது நடக்கவில்லை. நோர்வேத் தூதுக் குழுவினரும் அப்போது பாலசிங்கத்தைச் சந்திக்க முடியவில்லை.

அமைச்சரவையை எந்நேரமும் என்னால் கலைக்க முடியும்." என்றெல்லாம் ஜனாதிபதி தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.(ஒ)

# 'மூன்றாவது மனிதன்' ஆதரவுடன் நூல் கண்காட்சி, விற்பனை

## யாழ்.பல்கலைக்கழகத்தில்

'மூன்றாவது மனிதன்' சஞ்சிகையின் ஒத்துழைப்புடன் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை ஏற்பாடு செய்துள்ள நூற்கண்காட்சியும் விற்பனையும் நாளை 12ஆம் திகதியும் 13ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளிலும் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

இதையொட்டி தமிழ்த்துறைத்தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வாசிப்பு, சிந்தனைத் திறன்மிக்கதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் பிரதான காரணிகளில் ஒன்று. சிந்தனைத் தேக்கம் என்பது தமிழில் பொதுப்போக்காக வளர்ந்துவரும் இக்காலகட்டத்தில் மூன்றாம்தர நூல்கள் பெருகி அதிகாரம் செலுத்த முயலும் வருந்தத்தக்க் நிலைமைகளுக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த நூல்களை அறிமுகமாக்கலும், வாசிப்பை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளும் தமிழ்ப் புலத்தில் முக்கியமானதாகின்றது.

குறிப்பாக இடப்பெயர்வுகளுக்கு (1995) பிந்திய யாழ்ப்பாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த நூல்கள் கிடைப்பதென்பது முயற்கொம்பாகியுள்ள நிலையில் தமிழின் கலை, இலக்கிய, மொழியாக்க மரபின் குறுக்குவெட்டுமுகத்தைத் தரிசிப்பதற்கான வாய்ப்பை உண்டுபண்ணுதலும், ஈழத்து இலக்கிய மரபில் நீண்ட தொடர் பாரம்பிரயத்தைப் பரீட்சையப்படுத்துதலம் முக்கியமான உடனடித் தேவைகளாகின்றன.

மேலும், நூல்களை வாங்கிப் படிக்கும் மரபை உண்டாக்குதலும், ஊக்குவித்தலும் இந்தப் படிநிலையின் மிகமுக்கியமான தேவைப்பாடுகளில் ஒன்றாகும். இது சிறந்த நூற்சேகரிப்புக்களை உருவாக்கும். அதேவேளை, புதிதாகச் சிறந்த நூல்களை வெளியீடு செய்வதற்கான வாய்ப்பையும் அதிகரிக்கும். மேலும், தமிழைச் சிறப்புப்பாடமாகப் பயிலும் மாணவர்களிடையே பெருமளவில் நிலவிவரும் தகுந்த நூல்களுக்கான கிடைப்பின்மையையும் நிவர்த்திசெய்ய உதவும்.

இவை கலை, இலக்கியம் தொடர்பான ரசனையைத் தேர்ச்சி அடையச் செய்வதுடன், புதிய படைப்பாளிகளை உருவாக்குவதிலும் கணிசமான அளவில் சாதகமான் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இவற்றினூடாகப் படைப்பாக்க வல்லமை உடையதொரு தமிழ்ச் சமூகத்தைக் கட்டியெழுப்பமுடியும்.

இந்தப் பின்னணியில், யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 2002 ஜூன் 12,13,14,15ஆம் திகதிகளில் காலை 10 மணிமுதல் மாலை 5மணிவரை நூற்காட்சியொன்றையும், விற்பனையையும் 'மூன்றாவது மனிதன்' சஞ்சிகையின் ஒத்துழைப்புடன் நடத்த ஏற்பாடு செய்துள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

**நாளை**

வைகாசி 29
புதன்கிழமை
(12.06.2002)
திதி : துதியை
பின்னிரவு 4.38 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
பின்னிரவு 1.23 வரை.
கற்கி ஜெயந்தி தினம்
சுபநேரம் : 4.22 - 5.52
ராகுகாலம்: 11.52 - 1.22
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

ஒருவர் தனது திறமையால் புகழடைவதை மற்றவர்கள் தாமதப்படுத்தமுடியுமே தவிர, கடுக்துவிடமுடியாது.

# மடத்தடிப் பகுதியிலிருந்து படையினர் வெளியேறினர்

## மக்கள் மீளக் குடியமர நடவடிக்கை

சாவகச்சேரி,ஜூன்11

சாவகச்சேரி மடத்தடிப் பகுதியில் கடந்த இரு வருடங்களாக சுமார் 40இற்கு மேற்பட்ட வீடுகளில் முகாமிட்டிருந்த படையினர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அங்கிருந்து வெளியேறியுள்ளதாகக் கூறப்படுகிறது.

படையினர் வெளியேறியதையடுத்து அப் பகுதியில் உள்ள வீடுகளின் உரிமையாளர்கள் மீளக் குடியமர்வதுக்காக தத்தமது காணிகளையும் வீடுகளையும் துப்புரவு செய்துவருகின்றனர்.

கடந்தமாதம் தமது வீடுகளை மீளத் தங்களிடம் ஒப்படைக்குமாறு கோரி அப்பகுதி முகாம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தி படை அதிகாரியிடம் மகஜர் கையளித்திருந்தனர்.

அத்துடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக அங்கிருந்து படையினரை வெளியேற்றி, தாம் மீளக்குடியமர ஏற்பாடு செய்து தரப்படாவிட்டால், மறியற் போராட்டம் நடத்தப் போவதாக. சமீபத்தில் தென்மராட்சி பிரதேச செயலருக்கு இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் சமர்ப்பித்த மகஜரில் குறிப்பிட்டிருந்தனர். இந்த நடவடிக்கைகளின் பின்னணியில் மடத்தடிப்பகுயில் இருந்து படையினர் வெளியேறியுள்ளனர்.

(ஒ-31)

## அடுத்தமாத முற்பகுதியில்

# வர்த்தக உடன்படிக்கை குறித்து ஆராய இந்தியக்குழு வருகிறது

புதுடில்லி,ஜூன்11

இலங்கை - இந்திய வர்த்தக உடன்படிக்கையை மீளாய்வு செய்வது சம்பந்தமாகக் கலந்துரையாட இந்திய வர்த்தக அமைச்சின் தூதுக்குழு ஒன்று அடுத்த மாத முற்பகுதியில் இலங்கைக்கு வர உள்ளது. இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ரவிகருணாநாயக்க, இந்திய வர்த்தக அமைச்சர் முரசொலி மாறனுடன் நடத்திய பேச்சுக்களின்போது இதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சின் பின்னர் புதுடில்லி 'தாஸ்பலஸ்' ஹோட்டலில் நடத்த செய்தியாளர் மாநாட்டில் பேசிய அமைச்சர் ரவிகருணாநாயக்க -

இரு நாடுகளுக்கும் இடையில் இளைஞர் கலாசார பரிமாற்றத் திட்டங்களை மேற்கொள்வது, இலங்கை இளைஞர்களுக்கு இந்தியாவில் தொழில் வாய்ப்பு வழங்குவது ஆகியவை தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்பட்டதாகவும் - இலங்கை இந்திய கூட்டு முயற்சியில் தொழிற் பேட்டைகளையும் தொழிற்சாலைகளையும் அமைப்பது பற்றி ஆலோசிக்கப் பட்டதாகவும் - தெரிவித்தார்.

(ஒ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வகுப்புக்கள்

Maths புதிய, பழைய பாடத்திட்டத்தில் O/L பரீட்சையில் A,B,C பெறுபேறுடைய தரம் 8,9,10 உட்பட கற்பிக்கப்படும். அனுபவம் மிகுந்த ஆசிரியர். 85, சிவன்கோயிலடி, சிவன் கோயில் பின்புறம் திருநெல்வேலி. (4722)

## தவறிவிட்டது

வில்வராசா நேமிநாதனின் தேசிய அடையாள அட்டை (இல. 702794080V), இரத்தினம் உதயகலாவின் தேசிய அடையாள அட்டை (இல.755071480V) இரண்டும 07-062002 அன்று நெல்லியடியில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீ சாயி மெடிக்கல், ம.ம.வித்.வீதி. நெல்லியடி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (4729)

44/1, யாழ்ப்பாணம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த தங்கவேல் வன்னியசிங்கம் என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.772393687V) யாழ்நகரப் பகுதிக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள பட்டாபி படமாடத்தில ஒப்படைத்து உதவவும். (4728)

துரைச்சாமி கஜேந்திரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.783354217V), விசேட அடையாள அட்டை, நேவி அடையாள அட்டை மூன்றும் 03-06-2002 திங்கட்கிழமை முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கே.கே.எஸ் வீதியிலுள்ள ஸ்ரீமாரி நகைமாடத்தில் ஒப்படைத்து உதவவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4700)

## விற்பனைக்கு

புதிய (பதியப்படாத) YAMAHA MATE 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா. திருநாவுக்கரசு (J.P), சிவாவீதி, பிள்ளையார் கோயிலடி, மூளாய்.(4726)

கொழும்பிலிருந்து புறொயிலர் குஞ்சும், பேட்டுக் குஞ்சும் 13.06.2002 மாலை வரவுள்ளன. பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளவும். தொடர்பு: 19, முருகேசா லேன், முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4651)

பகிறா பாம் No.1 புறொயிலர் குஞ்சுகள் இன்று மாலை பெற்றுக் கொள்ளலாம். முன்பதிவு செய்தவர்களும் மாலை 6 மணிக்கு முன் பெறறுக் கொள்ளவும். தொடர்பு: இல.40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.(4687)

## மணமகள் தேவை

1971 இல் பிறந்த, கனடாவில் பிரஜாவுரிமை உள்ள கிறிஸ்தவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. தரகர் தேவையில்லை. தொடர்பு:64, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (4727)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கு, ஞானசம்பந்தர் ஒழுங்கை, சின்னராசா (சங்கரத்தை) தோட்டத்துக்கு அருகில் 10 பரப்புக் காணியும், வீடும் மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் தொடர்புகளுக்கு: க.பிரபாகரன், 52/2, வைமன் வீதி, நல்லூர். T.P: 021 - 2157. (4698)

## வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவி

அச்சுவேலி வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் வாழ்க்கைத தரத்தை மேம்படுத்துவதற்கு ஆடுகள, கோழிக் குஞ்சுகள், மாணவர்களுக்கான பயிற்சிப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன. (ஒ-11).

## மீன்பிடி டிப்ளோமாதாரிகளுக்கு

மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகளுக்கான ஆதாரப் பயிற்சிநெறி ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் இரண்டு தினங்களுக்கு மல்லாவியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியில் பங்கு கொள்ளவிரும்பும் மீன்பிடி டிப்ளோமாதாரிகள் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் தமது பெயர் விவரங்களை யாழ்.கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் கே.சித்தரவடிவேலு கேட்டுள்ளார். (எ)

---

உ

"வேழமுகத்து விநாயகனைத்தொழ வாழ்வு மிகுந்து வரும்"

## யாழ் - அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ விரகத்திப் பிள்ளையார் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



விநாயக அடியார்களே!

மேற்படி பாலஸ்தாபன கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் வைகாசிமாதம் 29ஆம் நாள் நாளை (12.06.2002) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாக திருவருள கைகூடியுள்ளது.

வைகாசிமாதம் 30ஆம் நாள் (13.06.2002) வியாழக்கிழமை காலை 8.15மணிக்கு பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து ஆவணி மாதத்தில் நடைபெறவுள்ள மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவுக்கு பிள்ளையார் அடியார்களாகிய நீங்கள் தாராளமாக நிதி உதவிசெய்து எம்பெருமான் அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

"திருப்பணி செய்வார்க்கு செம்பொன் விருப்புடன் ஈவார் பெறுக வீடு"

அத்தியடி, யாழ்ப்பாணம். (4734)

யாழ். அத்தியடிப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக செயற்குழு.

---

## மணவாழ்வின் முதலாம் அகவை



திருமண வாழ்வின் முதல் வருட நிறைவு நாளை இன்று (2002.06.11) செவ்வாய்க்கிழமை கொண்டாடும்

**திரு.திருமதி பாஸ்கரன் - சகிலா** தம்பதியினரை

பதினாறு பேறுகளும் பெற்று சீருஞ்சிறப்புமாகப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.


*பாடசாலை வீதி, எழுதுமட்டுவாழ்.* (4733)

- குடும்பத்தினர். *மீசாலை வடக்கு, மீசாலை.*

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 30 - 03 - 1969



உதிர்வு 12 - 05 - 2002

## அமரர் தம்பிராசா சதீஸ்சந்திரன்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எம் அன்பு மகன் நோயுற்றிருந்தவேளையில் வைத்தியசாலையிலும், வீட்டிலும் வந்து ஆறுதல்வார்த்தை கூறிய அயலவர்கள், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் துயரச் செய்திகேட்டு எமக்கு உதவிகள் பல புரிந்தோருக்கும், மரணச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும், நாம் அறியாமலே பல்வேறு வழிகளில் எமக்கு உதவிகள் செய்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

*பாரதி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.* (4730)

*உங்கள் பிரிவால் துயருறும்:* குடும்பத்தினர்.

---

# மாணவர்களின் செயற்பாடுகள் மண்ணுக்கு நன்மையளிக்க வேண்டும்

## எழுச்சி நிகழ்வில் புலிப்பிரமுகர் உரை

அச்சுவேலி,ஜூன்11

மாணவர்களின் செயற்பாடுகள், மண்ணுக்கும் மக்களுக்கும் நன்மை அளிப்பனவாக அமையவேண்டும்.

- இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு பிரமுகர் பாவலன். அச்சுவேலி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பாவலன் மேலும் கூறுகையில்:-

'மாணவர்சக்தி நாட்டின் முதுகெலும்பாக இருந்து மக்களையும் மண்ணையும் பாதுகாக்கவேண்டும்.

'மாணவர்கள் மண்ணையும் மக்களையும் நேசித்து தமது கல்வியை நிறைவுசெய்ய வேண்டும். மாணவர்களின் செயற்பாடுகள் மண்ணுக்கும் மக்களுக்கும் நன்மையளிப்பனவாக அமையவேண்டும்.

'சிவகுமாரனின் ஆற்றல்கள் சுய நலம் இன்றி பொதுநலன்மிக்கனவாக இருந்தமையினால்தான் விடுதலைப் போராட்டத்தில் வித்தியாசமான சந்தனை ஓட்டத்தை உருவாக்கியது.

'காட்டிக் கொடுப்பவர்கள் இன்று மட்டுமல்ல அன்றும் இருந்தார்கள். அவர்களினால்தான் போராட்டம் பின்னடைவுகளைச் சந்தித்தது. அந்த வகையில் சிவகுமாரன் அவர்களும் அன்று காட்டிக்கொடுக்கப்பட்டார்.

'சிவகுமாரனின் போராட்ட உணர்வு மாணவர்களுக்கு உந்துசத்தியாக நின்றுதவியது. அதனால்தான் மாணவா எழுச்சிநாள் அவரது போராட்ட உணர்வை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டது.'

என்று அவர் கூறினார். (ஒ-11)

---

# வாசகர் திருமுகம்

## அடாவடித்தனத்தை தட்டிக்கேட்காதது ஏன்?

"தீனா குறூப்"என இனம் காணப்பட்ட அடாவடிக் குழுவினர் குடும்பப் பெண் ஒருத்தி மீது அங்க சேஷ்டை புரிந்ததாகவும், இதைச் தட்டிக் கேட்கப்போன அப்பெண்ணின் கணவரும் பொதுமகன் ஒருவரும் மேற்படி குழுவினால் தாக்கப்பட்டபின் பொதுமகன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் 05.06.2002 அன்று வெளியான 'உதயன்' பத்திரிகை மூலம் அறியமுடிகிறது.

இந்தச் சம்பவத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பொதுமக்கள் ஒன்று சேர்ந்து இந்த அடாவடிக் குழுவினருக்குத் தக்கபாடம் புகட்டுவதிலிருந்து தவறிவிட்டார்கள். இந்த ஆபத்து எனக்கு வரவில்லைத்தானே என்ற மனோபாவம் எம்மக்களிடையே வளர்ந்து வருவதன் காரணமாகவே இச்சம்பவத்தை கண்ணுற்ற பொதுமக்கள் அமைதிகாத்தார்கள் போலும். எமது மண்ணில் மனிதத் தன்மையும் மனிதநேயமும் குன்றிவருவதையே மேற்படி சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவம் நிகழாமல் தடுப்பதற்கு சமூகப் பெரியோர்கள் பொருத்தமான ஏற்பாடுகளையும் வழிமுறைகளையும் ஆய்ந்தறிந்து நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும் எனத் தமிழ்ப் பெண்கள் சார்பாகக் கோருகிறேன்.

*நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

**- செ.கலாநிதி**

## குடிதண்ணீர் பிரச்சினை தீருமா?

தற்போது ஏற்பட்டிருக்கும் கடும் வரட்சி காரணமாக கடலோரக் கிராமமான கரவெட்டி கிழக்கில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவும் இந்தக் காலகட்டத்தில் கரவெட்டி கிழக்குப் பகுதியில் குழாய் மூலம் வழங்கப்பட்ட குடிதண்ணீா விநியோகம் கடந்த இரண்டு வாரகாலமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் ஐம்பதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

இதற்கு பொறுப்பானவர்களுக்கு எடுத்துக் கூறியபோது நிலத்தடி நீா விநியோகிக்கும் குழாய் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளது என்றும் இதனை உடனடியாக திருத்தவேலை செய்வது முடியாது என்றும் கூறப்பட்டுள்ளது.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் குடிதண்ணீா முக்கியமானது. எனவே உடனடியாக பாதிப்படைந்த நிலத்தடி குழாயைத் திருத்தம் செய்து பாதிப்படைந்த குடும்பங்களுக்கு உதவ பொது நிறுவனங்களோ கட்சி பிரமுகர்களோ முன்வருவார்களா? சம்பந்தப்பட்டவர்கள் எவரும் எங்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கரவெட்டிகிழக்கு, கரவெட்டி.* **இ.செங்குந்தவாசன்.**

## சீரற்ற போக்குவரத்தும் தபாற் சேவையும்

மாதகல் - யாழ். இல.787 பேரூந்து வண்டி சீரற்ற முறையில் தனது பஸ் சேவையை நடத்துகின்றது. இதன்காரணமாக தபாற்சேவையும் சீரற்ற முறையில் நடைபெறுகிறது.

தந்திகள், கடுகதி போன்ற அவசர கடிதங்கள் மிகவும் காலம் தாழ்த்தியே பொதுமக்களைச் சென்றடைகின்றன.

'பஸ்வரும்' எனக் காத்திருந்து தெருவில் நீண்டநேரம் தமது நேரத்தை பொதும[illegible]களும் தபால் ஊழியர்களும் செலவழிக்கின்றனர்.

இதனை பொது அமைப்புக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப் படுத்தியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

"உதயன்" வாசகர் முகத்தினூடாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

மாதகல். **- கமீலா**

## வெடிபொருள்கள் பற்றிய விழிப்புணர்வு தேவை

யாழ். குடாநாட்டிலும் ஏனைய பகுதிகளிலும் மக்கள் மீளக் குடியமர்ந்து கொண்டிருக்கிறார்கள். கண்ணிவெடிகள் அகற்றப்படாத பிரதேசங்களாக பல பகுதிகள் இன்னும் இருக்கின்றன.

இந்நிலையில், இவ்விடயம் பற்றி மக்களுக்கு அறிவுறுத்தல்களும், கருத்தரங்குகளும், விழிப்புணர்வுக் கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. எனினும், ஆங்காங்கே 'விறகு எடுக்கவும்' வீடு பார்க்கவும்' என்று மிதி வெடியில் சிக்குண்டு அங்கவீனம் அடைந்து பலர் இருக்கின்றார்கள்.

இது ஒருபுறமிக்க, வெடிபொருட்களைக், கையாடி அல்லது பரீட்சித்துப் பார்த்து மரணமடைந்த அல்லது படுகாயமடைந்த சம்பவங்கள பெரும் தொகையில் இல்லாவிட்டாலும், சில சம்பவங்களையாவது கேள்விப் பட்டிருக்கின்றோம்.

அண்மையில் மூன்று சிறுவர்கள் (இரண்டு சம்பவங்களில்) மிதிவெடிகளைக் கண்டெடுத்துக் கையாடி இருக்கிறார்கள், அவர்கள் மூவரும் படுகாயம் அடைந்தது மட்டுமல்லாது, ஒருவர் கண்ணொன்றை இழந்துள்ளார், மற்றவரின் கைகளின் பத்து விரல்களும் மோசமாகப் பாதிப்படைந்திருக்கின்றன. இவர்கள் மூவரும் பாடசாலைக்குச் செல்லாத அல்லது இடைநடுவில் நிறுத்திக்கொண்ட 13வயதை அடைந்த சிறுவர்கள்.

இவ்விடயம் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் கிராமங்களை அண்டிய பிரதேசங்களில் நடத்துவதும், பல தரப்பட்ட மக்களுக்கு அதனை வழங்குவதும் தொடர்ந்து ஆற்றப்பட வேண்டிய முக்கிய பணியாகும்.

**செ.அன்புராசா,**
ஆன்மகுரு புனித வேளாங்கண்ணி சிற்றாலயம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## பிரதமர் தலைமையில் இடம்பெறும்
# அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில்
# புதிய தேர்தல் விதி குறித்து ஆராய்வு
## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்11

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தல்கள் தொடர்பான புதிய விதிமுறைகள் குறித்து விவாதிக்கப்படும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொதுத் தேர்தல்களைப் பொறுத்தவரையில் புதிய விதிமுறைகள் நடைமுறைப்படுத்தவேண்டியதன் அவசியம் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத் தேர்தல்களில் தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளில் பல குறைபாடுகள் இருப்பதாகவும் -

புதிய விதிமுறைகள் நடைமுறைப் படுத்தப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டிற்கு நாடாளுமன்றத்தின் சகல உறுப்பினர்களும், நாட்டுமக்களும் ஓர் ஆணித்தரமான முடிவிற்கு வந்துள்ளதாகவும் -

ஜேர்மன் நாட்டுத் தேர்தல் விதிமுறைகள் இலங்கைக்குப் பொருத்தமாக இருக்குமென்றும் -

அவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

இதேசமயம் - புதிய விதிமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவைதான். ஆனால், ஜேர்மன் நாட்டுமுறை என்று அல்லாமல் இலங்கைக்குப் பொருத்தமான முறைகள் ஆராயப்பட்டு அரசியல் இலாபம் கருதாத முறைகள், புதியவிதிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி. உறுப்பினர் விஜித ஹேரத் கூறினார்.

இதனையடுத்தே அமைச்சர் ஜி.எல் பீரிஸ் 17ஆம் திகதி கூட்டத்தில் புதிய தேர்தல் விதிமுறைகள் குறித்து ஆராயலாம் எனத் தெரிவித்தார்.

அதனை அமைச்சர் கரு ஜயசூரிய ஆமோதித்துப் பேசுகையில் -

நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் புதிய விதிமுறைகள் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு மட்டுமன்றி சகல தேர்தல்களிலும் கையாளப்பட வேண்டுமெனக் கோரினார். (ஒ)

# வங்கி உதவியாளர் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன்11

இலங்கை வங்கியாளர் பயிற்சி நிலையத்தினால் நடத்தப்படும் மக்கள் வங்கி பயிலுநர் வங்கி உதவியாளர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் தகுதியற்றோரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு ஏனையோருக்கே அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என வங்கியாளர் பயிற்சி நிலையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதென மக்கள் வங்கியின் வடவலயப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (எ)

# யாழ். மாம்பழத்தை விட அப்பிள் மீது மக்கள் மோகம்!

யாழ்ப்பாணத்துக்கு புகழ்சேர்த்த மாம்பழங்களைவிட, கொழும்பில் இருந்து இங்கு கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படும் அப்பிள் பழங்களை வாங்குவதிலேயே யாழ்ப்பாண மக்கள் ஆர்வங்காட்டி வருவதாகக் கூறப்படுகிறது.

இரு பழங்களுக்கும் இடையே விலைகளில் கணிசமான வித்தியாசம் இருப்பதே இதற்குப் பிரதான காரணம் என்று கருதப்படுகிறது.

இறக்குமதி செய்யப்பட்டு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்படும் அப்பிள் பழங்களை தற்போது 50 ரூபாவுக்கு 4 பழங்கள் என வாங்க முடிவதாகவும் -

இதேசமயம், இங்கேயே உற்பத்தியாகும் மாம்பழங்களில் நல்ல ரக பழம் ஒன்று 15 ரூபாவிலிருந்து 25 ரூபா வரை விற்கப்படுவதாகவும் -

சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயினும், மாம்பழங்கள் சந்தைக்கு அதிகம் வர ஆரம்பித்தால் இந்த நிலை மாறிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-51)

# யானைகள் கொல்லப்படுவது இலங்கையில் அதிகரிப்பு!

கொழும்பு,ஜூன்.11

அண்மைக்காலமாக இலங்கையில் காட்டுயானைகள் கொல்லப்படுவது அதிகரித்துள்ளதாக வனவள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

'குருநாகல், புத்தளம், அநுராதபுரம், வவுனியா ஆகிய பிரதேசங்களில் உள்ள காடுகளில் கடந்த 5 மாத காலத்தில் சுமார் 25 யானைகள் வரை இனந்தெரியாதவர்களால் கொல்லப்பட்டுள்ளதாகவும் -

கடந்த வாரத்தில் மட்டும் வவுனியா-பெரியகாடு, செட்டிகுளம், அநுராதபுரம் மற்றும் ஹொர பொத்தான காட்டுப் பகுதிகளில் கொல்லப்பட்ட 4 யானைகளின் உடல்கள் மீட்கப்பட்டதாகவும் -


அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தற்போதைய சமாதானச் சூழலில் இலங்கைக்கு சுற்றுலாவரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் தந்தம் உட்பட யானையின் உடற்பாகங்களை பயன்படுத்தி செய்யப்படும் கைவினைப் பொருள்களை வெளிநாட்டவர் அதிக விலைக்கு வாங்குவதால் யானைகள கொல்லப்படுவது அதிகரித்திருப்பதாக வனவள வட்டாரங்கள் கூறுகின்றன.

# பசிப்பிணி போக்கப் படைக்கலமெடுத்த தமிழ்நிலச் சான்றோர் புலவர் பெருமக்கள்

**"பண்டைத் தமிழரின் பண்பாட்டு விழுமியங்களும் பரந்துபட்ட அறம் தழுவிய செயற்பாடுகளும்" என்ற தலைப்பில் வெளியாகி வரும் தொடர் கட்டுரையின் மற்றொரு பகுதி இன்று பிரசுரமாகின்றது.**

'பாரகம் முழுவதும் பசிப்பிணி அறுக' என ஆதிரை என்னும் மங்கை நல்லாள் மணிமேகலையின் கையில் இருந்த அட்சய பாத்திரத்தை வாழ்த்தினாள். 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்றான் பாரதி. 'பசி வந்திடப் பத்தும் பறந்திடும்' என்பது பழமொழி. 'வயிற்றிற்குச் சோறிடுதலே'



வாழ்க்கையின் முக்கிய பணியாகும். பசித் துன்பம் வருத்தும் நாட்டில் மக்கள் வாழ்வாங்கு வாழமுடியாது. உண்ணலுக்கு அடுத்ததாக உடுத்தலும், அதற்கு அடுத்ததாக வீடு அமைத்து வாழ்தலும், தற்காப்புக்கான ஏற்பாடுகளைச் செய்தலும் வாழ்க்கைக்குரிய ஆரம்ப செயற்பாடுகளாகும். இவற்றிற்கெல்லாம் பொருளே அடிப்படைத் தேவையாகும். 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' - என்பர்.

தள்ளா விளையுளும், தக்காரும் தாழ்விலாச் செல்வரும் பண்டைத் தமிழகத்தில் இருந்தனர். கஞ்சிக் கவலை மிகுந்த நாட்டில் கலைக் கவலை எழாது; கடவுட் கவலையும் எழாது. பசித்துன்பம் அலைக்கும் நாட்டில் பண்பாடுகள் வளராது. ஆனால், தமிழகத்தில் இந்தக் கவலைகள் எழுந்தன. கலைகளும் எழுந்தன. கலை, கலாசாரம், கடவுள் நெறிகள் பண்பாடுகள், நாகரிகம் எல்லாம் வளர்ந்தோங்கின. இதனால் தமிழ்ச் சான்றோரும் புலவர் பெருமக்களும், தம் பாடல்களில் நாகரிக வெளிப்பாடுகளை அதிகம் வெளிக்காட்டாமல் பண்பாட்டு விழுமியங்களையே எடுத்துக்காட்டினர். 'பசியெனல் அறியாப் பணையில இருக்கை' என்றும், 'பசிப்பிணி மருத்துவன்' என்றும், 'பாண் பசிப் பகைஞன்' என்றும் வள்ளல்களைப் பாராட்டிப் பாடினர். 'எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தப் பெற்றதால்' தமிழ் நாடு முன்னேற்றத்திற்குத் தகுதியுற்ற நாடாக இருந்தது. இதனால் தமிழ் மக்கள் வயிற்று வாழ்வில் உயர்ந்து கலை வாழ்விற்கு நிமிர்ந்தனர். சிற்பம், சித்திரம், சங்கீதம், நாடகம், கூத்து ஆகிய ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் நேயமுடன் வளர்த்தனர். இதனால் கலை இன்பம் நிலைபெற்றது. கலைகள்மூலம் வாழ்க்கையின் உயர் தனிச சிறப்புகள் வலியுறுத்தப்பட்டன.

தோயன் மாறன் என்பவன் ஈர்ந்தூரில் வாழ்ந்த வீரன். அவன் செல்வனும் அல்லன். வறிஞனும் அல்லன். ஆயினும், கொடைமனம் உடையவன். அவனை நாடிச்சென்ற இசைக் கலைஞர் பசி அறிந்திலராம். அக்காரணத்தால் அவன் 'பாண்பசிப் பகைஞன்' எனப் பாராட்டப்பட்டான். தன் நாட்டு அரசன் பொருட்டுப் போர்க்களம் புகுந்து பெருஞ்சமர் புரிந்து விழுப்புண் பல பட்டவன். அவனிடம் எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் எனும் புலவர் ஒருவர், பசியால் வாடியவராய்ச் சென்றார். அவர்தம் ஒட்டிய வயிற்றைக் கண்டு தோயன் மாறன் வருந்தினான். 'உணவின்றி வாடும் வயிறு - கலைஞர் வயிறு, என் கண்ணெதிரேயான் காண வாடுகின்றது. யான் உயிர் கொண்டு வாழ்தல் பெரும் பிழை. போர்க்கருவிகள் வேண்டும், வேல் வேண்டும், வேல்கொண்டெழுந்து பொருளுடையவரிடம் சென்று அவரோடு பொருவேன். புலவரின் வறுமை தீர்ப்பேன். என் உடல் வலியையும் உயிர வாழ்வையும் ஈடுவைத்துக் கலையுரிமையைக் காக்க வல்லேன். கலைஞரின் பசி என் சாக்காடு ஆகுக' என எண்ணி எழுந்தான். மறுபுறம் திரும்பினான். தன்னூர்க் கொல்லனைக் கணடான். 'ஐய! உன்னை நினைந்தே எழுந்தேன். புலவர் வயிறுகாண்' அவர் இரக்கின்றார் அல்லர். இரப்பவன் யானே, வேல் வேண்டும். பகைவரோடு பொருது, பொருள் கொணர வேண்டும். அதற்கு வேல் வேண்டும். வேல் வடித்து உதவுக' - என்றான்.

*'நிரப்பா கொடுக்கும் செல்வமும்*
*இலனே*
*இல்லென மறுக்கும் சிறுமையும்*
*இலனே*
*இறையுறு விழுமம் தாங்கி*
*அமரகத்(து)*
*இரும்புசுவைக் கொண்ட*
*விழுப்புண் நோய் தீர்ந்து*
*மருந்துகொள் மரத்தின்*
*வாள்வடு மயங்கி*
*வடுவின்றி வடிந்த யாக்கையன்*
*கொடை எதிர்ந்(து)*
*ஈர்ந்தையோனே பாண்பசிப்*
*பகைஞன்*
*யாம்தன் இரக்குங் காலைத்*
*தாம்எம்*
*உண்ணாமருங்குல் காட்டித்*
*தன்னூர்க்*
*கருங்கைக் கொல்லனை*
*இரக்கும்*
*திருந்திலை நெடுவேல் வடித்*
*திசின் எனவே'* (புறம்: 108)

மதுரைக் குமரனார் என்னும் அப்புலவர் இவ்வாறு பாடியுள்ளார். கலைஞரது உண்ணாமருங்குல் கண்டதும் வீரன் வேல் தேடும் காட்சி ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகம் கண்ட காட்சி.

இந்த உணர்வே 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' எனப் பாரதி ஊடாகப் புதிய பிறப்பாக்கம் பெற்றதெனலாம். கலைஞர் வாழ்ந்தாலே உலகம் வாழும். நாட்டுமக்கள் பசித்திருந்தால் கலைஞர் பொறுக்கமாட்டார். இந்த உண்மையின் வழிநின்றே, உணர்வுமிக்க செயல்வீரர் பண்டைத் தமிழகத்தில் கொடையாளராக விளங்கினர். இடையறாப்பொருள் வருவாய் நல்கும் செல்வம் இல்லை எனினும் அவர் கவலை உற்றதில்லை. செல்வம் நல்கும் ஆண்மையை - வேல் கொண்டு எறிந்து பொருது வென்றேனும் செல்வம் தேடும் ஆண்மையை நம்பி அவர் வாழ்ந்தனர். உண்ணாது வாடிய வயிற்றைக் கண்டதும் வேல் தேடிப் போருக்கு எழும் வீரம் அன்றோ உண்மையான வீரம்.

பெருஞ்செல்வராக இருந்தும் ஈகைப்பண்பு இல்லாதவரே வறியவராவர். பொருள் அற்றவராக இருந்தும் கொடை மனம் பெற்றவரே செல்வராவர். உள்ளத்தின் பெருமையும் சிறுமையுமே அவர்களுக்கு செல்வமும் வறுமையுமாயிருந்தன. உள்ளத்தனையது உயர்வு. 'இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே' என மதுரைக்குமரனார் கூறியது எண்ணிப் பார்க்கத் தக்கதாகும். வறுமை என்னாது 'சிறுமை' என்றார். கலைஞர்களுக்கு உதவும் கடமையைச் செய்யாது அமையும் நிலைமை தோயன்மாறனிடம் இல்லை. அவனை நல்குரவு அணுகவில்லை. 'என் கடமை செய்வேன், செயும் நீர் செய்திடுவேன். செயயாது அமைகிலேன். வேல் வடித்துக கொடுக்க' எனக் கொல்லனை இரந்த உரவோனை வறியவன் என்று கூறப் புலவர் நா எழவில்லை. இதைவிட மற்றும் ஒரு காட்சியையும் காண்போம் வாரீர்.

## நாக.சண்முகநாதபிள்ளை

குமணன் புகழ்பெற்ற கொடையாளி. தம்பி, சூழ்ச்சி செய்து தமையனுக்கு இடர் இழைத்தான். காட்டிற்கு அனுப்பினான். நாட்டைக் கைப்பற்றினான். எனினும் குமணனின் இயல்பான கொடைத்திறன் அவனை விட்டு அகலவில்லை. குமணன் பொருளை இழந்தானே அன்றி, அதனிலும் மேலான உடலையும் ஆவியையும் இழந்திலன் ஆதலால் வாழ்வு உள்ளவரை வண்மை மாறாத நிலையில் குமணன் இருந்தான். குமணன் காட்டில் இருந்த காலத்திலும் புலவர் மனம் அவனை நாடிற்று. பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் தம் வறுமை போக்க, உரிமையோடு காட்டில் வாழ்ந்த குமணனை நாடினார். அவரின் வறுமை நினைக்கவும் கொடியதாய் இருந்தது. அவர்தம் மனைவியின் துன்பமே அவரைக் காட்டிலிருந்த குமணனிடம் அனுப்பியது. அடுப்பில் காளான் பூத்தது. தாய் மார்பில் பால்வற்றவே குழந்தை சுவைத்துச் சுவைத்துப் பால் பெறாமல் அழுதது. தாய் முகத்தைப் பார்த்தது; தாய் தந்தையாம் புலவர் முகத்தைப் பார்த்தாள். புலவர் குமணன் முகத்தைக் காணக் காட்டிற்குச் சென்றார். தம்பியின் வன்நெஞ்சம் தன் தலைக்கு விலை பேசியிருப்பதையும் குமணன் உணர்ந்தான். தன் வாளை எடுத்துப் புலவர் கையிற்தந்து, 'இதோ வாள்! என் தலையே உமக்குப் பரிசு, தலையைத் துணித்துப் பரிசைப் பெறுக' என்றான். புலவர் வியந்து நின்றார். இளங்குமணனிடம் சென்று 'அண்ணனைக் கண்டேன்; அவன் நிலை இனீனது' எனத் தெரிவித்துக் குமணன் தந்த வாளையும் காட்டி இளங்குமரனுக்கு நல்லறிவு புகட்டினார்.

பெருந்தலைச் சாத்தனார் தம் வறுமைபோக்க வேறு ஒருவனிடம் சென்றிருக்கலாம். மூவேந்தரை நாடியிருக்கலாம் அவ்வாறு செல்லவில்லை. காரணம் வெறும் செல்வம் பெற்றவரை மட்டும் நாடவில்லை. பொருள் வளத்தோடு, கலைவளம், கருணை வளம், கருத்துவளம் பெற்றவரையே நாடித்து இத்தகைய புலவர் தம் வறுமையைத் துடைத்து அவர்தம் கலையுணர்வும் பண்பாட்டுணர்வும் குன்றாதவாறும் பெருமித வாழ்வு மங்காதவாறும் அரிய பரிசில்கள் தந்து காத்தவன் குமணன். நாடு இழந்ததை விட வாடும் புலவரின் வறுமையைக் காண்பதே கொடிது எனக் கருதித் தலையைத் துணிப்பதற்கு வாள் தந்த குமணன் வணமைக்குச் (கொடை) சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கினான். புலவர் பாடிய சிறப்புப் பண்டைத் தமிழ் மக்கள் வாழ்விலும் புகுந்து அவர்களைத் தக்க பயன்பெறச் செய்தது. செய்ய வேண்டுவம். □

**இக்கட்டுரை பழந்தமிழ் இலக்கியங்களோடு ஒரு பயில் பண்பை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகும். திறமான புலமைகளை பண்டைய இலக்கியங்களில் தேடிச் சுவைக்கும் திறன் அருகிவரும் தற்காலக் கல்வியியற் போக்கில் ஓர் உயர்வான மீட்டலை இவை கொண்டுவரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.**

# நெருக்கடிகள் மிகுந்த சூழலிலும் அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர்

**பேராசியர் அ.துரைராசாவின் 8ஆவது நினைவுதினம் இன்றாகும். அதனையொட்டி பிரசுரமாகும் ஆக்கம் இது.**

இருபத்தைந்தாண்டுகள் கடந்த, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்குப் பலரும் பங்காற்றியுள்ள போதிலும், அமரர் பேராசிரியர் அ.துரைராசாவின் பணியும், பங்கும் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில் போர்க்காலச் சூழலில் வசதிகளைத் தேடி கல்விமான்கள் பலர் சென்றபோதும் மக்களை நேசித்த பேராசிரியர் அ.துரைராசா சோதனை மிக்க சூழ்நிலையில் துணைவேந்தரானார்.

வடமராட்சியில் உள்ள இமையாணன் என்னும் கிராமத்தில் பிறந்த பேராசிரியர் துரைராசா, உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றில் கற்று பின்னர் பொறியியல் பட்டதாரியானவர்.

**பேராசிரியர்**
**நா.ஞானகுமாரன்**

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில ஆய்வினைச் செய்த பேராசிரியர், அங்கு பலரது பாராட்டுக்குரியவரானார். மண்ணில் உள்ள தகைப்பு இயல்புகள் பற்றி இவர் மேற்கொண்ட முன்னோடி ஆய்வு மண் பரிசோதனைகான எளிய தகைப்புக் கருவியின் புதிய மாதிரியொன்றை அபிவிருத்தி செய்ய வழிகோலியது. இந்த ஆய்வின் இறுதியில் பேராசிரியர் கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றுக்கொணடார்.

அவரது ஆய்வின் பெறுபேறாய் கல்வியுலகில் அவர் முன்வைத்த ஒரு கோட்பாடானது மேலைத் தேயத்து அறிஞர்களால் 'துரைராசா கோட்பாடு' எனப் பெயர் சூட்டப் பெற்று நூல்களிலும் எடுத்தாளப்படும்



பெருமைக்கு இட்டுச் சென்றது.

வாட்டர்லூ பல்கலைக்கழகத்திலும், பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்திலும் ஒவ்வோராண்டு இடைவரவுப் பேராசிரியராக அழைக்கப் பெற்றுக் கடடையாற்றிய பேராசிரியர், பல வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் பணியாற்ற வாய்ப்புக்கள் இருந்தபோதிலும் அவற்றைவிட்டு போர்க்காலச் சூழலில் விருப்பத்தோடு யாழ் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவியை ஏற்றமை மக்களில் இவர் கொண்ட நேசத்தைக் காட்டுகிறது.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றில் கல்வி மற்றும் மாணவர் மேம்பாடுகளுக்காக நிதியங்களை ஏற்படுத்தியமை பேராசிரியரின் சாதனைகளில் பிரதானமானதாகும். ஏழை மாணவர்களுக்கு உதவ 'துணைவேந்தர் நலன் நிதியம்' ஆராய்ச்சிகளை மேம்படுத்த 'ஆராய்ச்சி நிதியம்', அறிவியல் வெளியீடுகளுக்காக 'வெளியீட்டு நிதியம்' ஆகியவை பேராசிரியரின் எண்ணத்தில் விளைந்த திட்டங்களே. அத்துடன் மாணவர்களின் எதிர்காலத்தை பிரதானமாகக் கொண்டு விவசாய பீடம் உருவானதும் இவர் காலத்திலேயே ஆகும். இராமநாதன் நுண்கலைக் கல்விக்கழகம், துறையாக தரமுயர்ந்ததும் -

யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் நிறுவுவதற்கான ஆரம்ப முயற்சிகள் தொடங்கியதும் - பேராசிரியரின் முயற்சியாலேயே யாகும். இத்தனை பெருமைகளை கொண்டிருந்த போதும் இந்தச் சாதனைகளை யாராவது பாராட்டினால், 'இவற்றை துரைராசா செய்யவில்லை, துரைராசா துணைவேந்தராக இருந்த போது நடந்தவை அவ்வளவுதான்' என்று புகழ் விரும்பாது அடக்கத்துடன் கூறுவது பேராசிரியர் அ.துரைராசாவின் வழக்கம். இதனால்தான் காலத்தின் ஓட்டத்தில் மறைந்துவிடாது பேராசிரியரின் புகழ் இன்றும் நிலைத்து நிற்கிறது. அவர் வழியில் செயற்படுவதே அவருக்கு நாம் செலுத்தும் நன்றியஞ்சலி ஆகும். ★

## இலவசப் புத்தகங்களை ஆவணப்படுத்த பணிப்பு

வலி.தெற்கு,ஜுன்11

2002 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச பாடநூல்கள் பற்றிய விவரங்களை ஆவணப்படுத்தி வைத்திருக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் விஜய நாயக்க ராஜபக்ஷ பாடசாலை அதிபர்களைப் பணித்துள்ளார்.

பாட நூல்களை மாணவர்களுக்கு வழங்கும்போது அது பற்றிய குறிப்பினை வைத்துக்கொள்வதற்கு வசதியாக சகல பாடசாலைகளுக்கும் நூல் விநியோகம் தொடர்பான குறிப்புப்புத்தகங்களும் அனுப்பிவைக்கப்படும் என்றும் -

வருடம் தோறும் இதுபோன்று அனுப்பப்படும் புத்தகங்களை பூரணப்படுத்தி ஆவணப்படுத்தி வைத்திருக்குமாறும் -

அவர் அறிவித்துள்ளார்.

(ஒ-152)


## நன்றி நவிலல்

கோகுலம், சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த *திரு.திருமதி தமோதரம்பிள்ளை* அவர்களின் மகன் **முரளீதரனுக்கும்** மகளிர் கல்லூரி வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த *திரு.திருமதி ஜெகதீஸ்வரன்* அவர்களின் மகள் **தனுஷியா** அவர்களுக்கும் சென்ற 5ஆம் திகதி நடைபெற்ற திருமணத்தில் கலந்து உதவியவா களுக்கும் சிறப்பித்தவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

**திரு.திருமதி தாமோதரம்பிள்ளை,**
(4721) **திரு.திருமதி ஜெகதீஸ்வரன.**


## ஒன்பதாம் அகவை நினைவுகள்

உதிப்பு 23 - 10 - 1926



உதிர்வு 22 - 05 - 1993

### அமரர் வல்லிபுரம் சங்கரப்பிள்ளை

*(விவசாய நண்பன்)*

**திதி: வைகாசி பூர்வபக்க பிரதமை (11.06.2002)**

*என்பணி முடிந்ததென்று தென்புலம் சென்று இன்றுடன்*
*ஒன்பது அகவைகள் ஓடி மறைந்ததையா!*
*நின் நினைவில் நாளும் வாழும் உறவுகளை*
*என்னசொல்லித் தேற்றுவது என சொல்லுமையா!*

*ச.வரதராசா,*
*"சந்நிதி இல்லம்",*
*கைதடி கிழக்கு, கைதடி.*

பிரிவினால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(C/22455)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 30 - 03 - 1965



ஆண்டவன் அடியில் 25 - 05 - 2001

### திருமதி சசிலேகாதேவி செந்தில்நாதன்

(மாசிவன்சந்தி, நீர்வேலி வடக்கு.)

*திதி:-* 11.06.2002

காலனவன் கவர்ந்திழுத்து
காலமது ஆனதம்மா ஓராண்டு!
கலங்கித் தவிக்கின்றோம் நாம்
கனவில் கண்டு துடிக்கின்றோம்!
மறவாது உங்கள் நினைவு என்றும்
தீராது எங்கள் துயர்.
*உங்கள் ஆத்மா சாந்தி பெற என்றும்*
*இறைவனைக் கண்ணீருடன் வேண்டி நிற்கும்:*

*அன்புக்கணவர்:* செந்தில்நாதன்,
*பிள்ளைகள்:* ஜெயநிதா, நிஷானி,
*சகோதரன்:* மகாதேவன் மற்றும் பெற்றோர், மாமி, மைத்துனிமார், மருமக்கள், பெறாமக்கள்.

*கொழும்பு.* (4693) தகவல்: *க.சண்முகலிங்கம் (தந்தை)*
T.P.555915

# வெளியிணைப்பு இயந்திரங்களை பயன்படுத்த மீனவருக்கு அனுமதி

## பாஷையூர் படையினர் வழங்கினர்

குருநகர்,ஜுன்11

குடாக்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் கடற்றொழிலாளர்கள் தமது வள்ளங்களுக்கு வெளியிணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்த கடந்த சனிக்கிழமை முதல் பாஷையூர் இறங்குதுறையில் உள்ள படையினர் அனுமதி வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அன்றையதினம் வெளியிணைப்பு இயந்திரங்கள் இணைக்கப்பட்ட 5 வள்ளங்கள் மூலம் கடற்றொழிலாளாகள் கடலுக்குச் சென்று மீன்பிடித்துவிட்டுத் திரும்பியுள்ளதாகவும் -

வெளியிணைப்பு இயந்திரங்கள் பயன்படுத்த அனுமதி கிடைத்துள்ளதால், மீனவர்கள் வழக்கத்திலும் பார்க்க சிறிது கூடிய தூரம் கடலுக்குள் சென்று தொழில் செய்து திரும்ப வாய்ப்புள்ளதாகவும் -

பாஷையூர் மீன்பிடிச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-51)

# மரத்திலிருந்து வீழ்ந்தவர் மரணம்!

யாழ்ப்பாணம்,ஜுன்11

சஞ்சீவி மரத்தில் இருந்து தவறி வீழ்ந்த ஒருவர் உயிரிழந்தார்.

குடத்தனை மணற்காட்டுச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னையா இராமையா (வயது 37) என்பவரே மரணமானவராவார்.

கடந்த 6ஆம் திகதி வீட்டு முற்றத்தில் நின்ற சஞ்சீவி மரத்தின் கொப்புகளைத் தறிப்பதற்காக ஏறிய சமயம் தவறிக்கீழே வீழ்ந்த மேற்படி நபர், படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைககாக யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டார்.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் இருநாள்களின் பின் கடந்த சனியன்று அவர் மரணமானார்.

நேற்று இடம்பெற்ற மரண விசாரணையின் பின் சடலம் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.

(எ-15)


## தேவை

**ஹாட்லிக் கல்லூரி**
**கணனி பயிற்றுவிப்பாளர் (Computer Instructor)**

தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 30-06-2002

*விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-*

**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**யா/ஹாட்லிக் கல்லூரி,**
**பருத்தித்துறை.** (4723)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1936 - 01 - 26



உதிர்வு 2000 - 06 - 03

### திருமதி ருக்மணி வல்லிபுரநாதன்

*திதி:* 11-06-2002

ஆண்டுகளிரண்டு சென்றும் உங்கள் அன்புமுகம் மறக்கவில்லை
நீங்கள் நீண்டதுயில் கொண்டதனை நினைக்கக்கூட முடியவில்லை
நாம் பூண்ட துயர்போக்க வழியெதுவும் புரியவில்லை - அம்மா!
ஆண்டவனின் பதம் நோக்கி ஆத்மசாந்திக்காய்த் தொழுகின்றோம்.

கந்தபுராண வீதி,
கந்தர்மடம். (4720)

**ரஜுலா, ரேணுகா மற்றும் உறவினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி குலசேகரம் நாகரத்தினம்

கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வதிவிடமாகவும் கொண்டு தற்போது கொழும்பில் வசித்தவரான திருமதி குலசேகரம் நாகரத்தினம் அவர்கள் 08.06.2002 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பையா - செல்லம்மா தம்பதியினரின் மருமகளும் குலசேகரத்தின் அன்பு மனைவியும் கமலினி (கனடா), கமலேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற மாலினி மற்றும் அமலேஸ்வரன் (கனடா), சினோவதனி (கனடா), தர்ஷினி (லண்டன்), தர்மினி (கொழும்பு), ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஷ்ணசாமி (கனடா), பிறேமாவதி (கனடா), வசந்தகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கோபிகா (கனடா), பிரிந்திகா (கனடா), தனுஷாந்த் (கனடா) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் மனோஜ் (கனடா), வினோஜ் (கனடா) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.06.2002) புதன்கிழமைவரை 292, Hospital Road, Kalubowila வில் உள்ள Jayaratna மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கல்கிசையில் உள்ள இந்து மயானத்தில் பி.ப.5.00 மணிக்கு தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*29/1-1/1, சமகி மாவத்தை,*
*தெளடான றோட், தெகிவளை.*
நிரந்தர வதிவிடம்:-
*இல.7, குகன் றோட்,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

தகவல்:
**கணவர், பிள்ளைகள்.**

(சி-22465)




## சிவாவின் புகழுடலுக்கு இறுதி மரியாதை

# தமிழ்த் தேசியம் வலுப்பெற்றாலே சமாதான முயற்சி சாதகமாகும்

## தீர்வுகள், சலுகைகளுக்கு மயங்காது தமிழ்மக்கள் ஒன்றிணைய வேண்டும்

**பி.ஜெயக்குமார்**

'ஆசியாவின் முத்து' என்றெல்லாம் வர்ணிக்கப்படும் இலங்கைத் தீவில் தற்போது போர் ஓய்ந்து, சமாதானக் காற்று வேகமாகவே வீசத் தொடங்கியுள்ளது. இருதரப்பாலும் கடைப்பிடிக்கப்படுகின்ற சர்வதேச மத்தியஸ்தத்துடனான போர்நிறுத்தம, என்றும் இல்லாத புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றது.

மக்களின் அமோக ஆதரவு பெற்று ஆட்சி செலுத்துகின்ற ஐக்கிய தேசிய முன்னணியும் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளான புலிகளும் அமைதி முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதில் நம்பிக்கை மற்றும் அவநம்பிக்கை மாறிமாறித் தோன்றி மறைகின்றன. இந்த முயற்சியில் இருதரப்பும் பல்வேறு சவால்களையும், எதிர்ப்புகளையும் சந்தித்தே தீரவேண்டும். இருதரப்புகளிலும் மக்கள் பலம் என்ற ஆயுதமே இறுதித் தீர்வைத் தீர்மானிக்கப்போகின்றது. தற்போதைய முயற்சிகளில் முட்டுக்கட்டைகள் ஏற்படாமல் தொடர்ந்து மக்கள் ஆணையைச் சரிவரப் பயன்படுத்தினால் மீண்டும் ஒரு போர் தவிர்க்கப்படும். ஆயினும், தற்போதைய அமைதி குறித்து தமிழ் மக்களிடையே சந்தேகங்கள் எழாமல் இல்லை. இவை நியாயமற்ற சந்தேகங்கள் என்று ஒதுக்கிவிட முடியாதவை. ஏனெனில், அந்த சந்தேகங்கள் கடந்தகால அனுபவங்களில் எழுந்தவை.

### ஆயுதப் போராட்டம்

கடந்த கால்நூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழ் இளைஞர்கள் சிந்திய குருதியும் அவர்களின் குடும்பங்கள் கொட்டிய கண்ணீரும் சாதாரண பொதுமக்களின் மரணங்களும் அக்குடும்பங்களின் பிரார்த்தனைகளும் விழிப்புணர்வுமே தற்போதைய சமாதானச் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இலங்கை அரசு அடைந்த தோல்விகளே இன்றைய சூழ்நிலைக்கு சிங்களத் தலைவர்களைக் கொண்டு வந்துள்ளதென்றால் தமிழ் மக்களின் ஒருமித்த ஆதரவு தொடர்ந்தும் தமிழ தேசியத் தலைமைக்கு இருப்பதே அடுத்து வருவதை தீர்மானிக்கும்.

இதேசமயம், மக்களின் நாடித் துடிப்பை அவ்வப்போது அனுமானித்து அதற்கேற்ப முடிவுகளை எடுப்பதும் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தமிழ்த் தலைமைக்கு இன்றைய கட்டாயத் தேவையாகும்.

சில நாடுகளில் நடைபெற்ற சுதந்திரப்போராட்ட நடவடிக்கைகளும் அதற்குப் பின்னான சமாதான சூழ்நிலைக்குரிய காலங்களில் மக்கள் தங்கள் போராளிகளுக்கு கொடுத்த தீர்ப்புக்களில் இருந்து தமிழ்த் தேசிய தலைமை செயற்படுத்த வேண்டிய விடயங்கள் நிறையவே இருப்பதாக இப்போராட்டத்தின்பால் அக்கறையோடு இருக்கின்ற புத்திஜீவிகள் தொட்டு சாதாரண மக்கள் வரை உணர்ந்துள்ளனர்.

### ஆபத்தான திட்டம்

நிக்கரகுவா, எல்சல்டோர் முதலான இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டங்கள் வேண்டத்தகாத சில நடவடிக்கைகளினால் மக்களால் நிராகரிக்கப்பட்டன. இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு ஆட்சி செலுத்திய போராளிக் குழுக்கள் மீது மக்கள் வெறுப்புக்கொள்ளுமளவிற்கு மேற்குலகம் வியூகம் அமைத்தது. அரைகுறைத்தீர்வுகள் திணிக்கப்பட்டு அவை மக்கள் ஆணை என்ற பெயரில் உறுதிப்படுத்தப்பட, அவ்வினத்தின் விடுதலைக்காக அர்ப்பணிப்புக்களைச் செய்த போராளிகள் தூக்கியெறியப்பட்டனர்.

இவ்வாறான சூழ்நிலை உருவாக வேண்டும். தமிழ்மக்களிடமிருந்து போராளிகள் இயன்றவரை ஓரங்கட்டப்படவேண்டும் என்ற பாணியிலேயே தற்போது திட்டங்களில் சில செயற்படுத்தப்படுவதாக சந்தேகம் உருவாவது தவிர்க்கமுடியாததே.

இவற்றிற்கு உலக வல்லரசுகளின ஆசீர்வாதமும் நிறையவே உண்டு. மக்களை தம்பக்கம் கவர்வதற்குரிய கவர்ச்சி நாடகங்கள் கச்சிதமாக அரங்கேறுகின்றன. பொதுமக்களின் விடயத்தில் தளர்வுகளையும் சலுகைகளையும் வசதிகளையும் கொடுப்பதில் அரசுத்தரப்பு முட்டிமோதி செயலாற்றுகின்றது. இதனை மக்கள் உணராமல் இல்லை. தளர்வுகளும், சலுகைகளும், தமிழ்தரப்பின் இறுக்கமான, நெருக்கமான நடவடிக்கை களிற்கு மத்தியில் ஒருவித சலனத்தை ஏற்படுத்தக்கூடும்.

இதன் மத்தியிலேயே எதிர்காலத்தில் தமிழ் மக்கள் சில தீர்மானங்களை எடுக்கப்போகின்றனர். அவர்களின் முடிவுகளே இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் மிகுந்த செலவாக்கு செலுத்தப்போகின்றன.

கடந்த கால சிங்கள அரசுகளின கடும்போக்குகளும், இராணுவத்தினரின் கட்டுக்கடங்கா செயற்பாடுகளுமே இளைஞர்களை ஆயுத வழியில் தற்கொடை செய்யும் அள்விற்கு சூழ்நிலைகளைத் தோற்றுவித்தன. மக்களும் போராளிகளை அளவு கடந்து நேசித்தனர். இதன் தாக்கத்தை அரசு நன்றாகவே உணர்ந்துள்ளது. கடநத கால வரலாற்றுத் தவறுகளை மறக்கடிக்க தற்போது அது மிகுந்த பிரயத்தனம் செய்கின்றது. அதில் வெற்றி காணாமலும் இல்லை.

தமிழ் மக்கள் நாட்பட்ட இனப்பிரச்சினையும், அதன் தாற்பரியங்கள் யாவற்றையும் மறந்து நாளாந்த பிரச்சினைகளைப் பற்றிய கவலையுடனேயே வாழ்கின்றனர். இதுவோர் ஆபத்தான சூழ்நிலையாகும். இங்கு மேற்கொள்ளவேண்டிய காய் நகர்த்தல்களும் எடுக்கவேண்டிய முடிவுகளும் மக்களின் விருப்பு, வெறுப்புகளை அடிப்படையாகக் கொள்ளும் கட்டாயத்தை உருவாக்கியுள்ளது.

### கடமைகள்

தமிழ் மக்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் தொடரப் போகின்ற ஒவ்வொரு நடவடிக்கைகளிற்கும் இன்றியமையாதவை ஆகும். தமது ஆதரவை அவர்கள் மேன்மேலும் வலுப்படுத்துவதோடு அதனைப் பேண வேண்டியதும் காலத்தின் கட்டாய தேவையாகும். தற்போது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள சலிப்பு நிலைகளிற்குரிய காரணங்களை காலதாமதமின்றி ஆராய்ந்து, புதிய நடவடிக்கைகளை மீளாய்வு செய்து நடைமுறைப்படுத்துவதெல்லாம் தமிழ் தேசிய தலைமையின் தலையாய கடமையாகும். எந்தத் தீர்வானாலும் பொதுமக்கள் சம்மதம் பெற்றே நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசு தரப்பு கூறிவருகிறது. அத்துடன் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி ஒரே கட்சிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுவிடும் எண்ணமும் அரசுத்தரப்புக்கு இருக்கக்கூடும்.

இந்நிலையில் மக்கள் சிந்திக்கின்ற, நாளாந்தம் கதைக்கின்ற, கவலைப்படுகின்ற விடயங்கள் மட்டில் தலைமை மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும். அதன் உண்மைகளை இயன்றவரை எடுத்தியம்பவேண்டும். மாற்று வழிகளை ஆராய்ந்து முடிவுகளை மறுபரிசீலனை செய்து நடைமுறைப் படுத்தவேண்டும். இப்பணி மிகக் கடினமானதாக இருந்தபோதிலும் மக்கள் தொடர்ந்தும் தமது ஆதரவை தமிழ் தேசிய தலைமை மீது வைப்பதை உறுதிப்படுத்த இதில் சிரத்தை காட்டவே வேண்டும்.

ஆக, தமிழ் மக்களும், தலைமையும் இவ்வாறு தத்தமது கடமைகளை உறுதிப்படுத்தினாலேயே சமாதான முயற்சிகள் தமிழினத்துக்கு சாதகமான முடிவை எட்டும்.

☆

## திருகோணமலையில்

# தொண்டர் ஆசிரியர்கள் நேற்று மறியற்போராட்டம்!

### கல்விப் பணிமனைகள் ஸ்தம்பிதம்

திருகோணமலை,ஜூன்11

வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்று திருகோணமலையில் மறியற்போராட்டம் நடத்தப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகம் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களப் பணிமனை ஆகியவற்றின் முன்பாக நடைபெற்ற இந்த மறியல் போராட்டத்தால், மேற்படி இரு அலுவலகங்களிலும் அன்றாடப் பணிகள் ஸ்தம்பிதமடைந்தன.

நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நியமனங்கள் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே மறியற்போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஒரே வளாகத்துக்குள் அமைந்துள்ள மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகம் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் முன்பாகக் காலையில் திரண்ட தொண்டர் ஆசிரியர்கள், இரு பணிமனைகளினதும் பிரதான வாசல்கள் முன்பாக அமர்ந்து மறியல் செய்தனர். இதனால் அந்த அலுவலகங்களுக்குள் பண்ணியாளர்கள் செல்ல முடியவில்லை.

இந்த நிலையில் முற்பகல் 9.50 மணியளவில் தொண்டர் ஆசிரியர்கள் தரப்புப் பிரதிநிதிகளுக்கும், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கே.சண்முகலிங்கத்துக்கும் இடையே பேச்சு இடம் பெற்றது. இதில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். செயலாளரின் அலுவலகத்தில் இந்தப் பேச்சு இடம் பெற்றது.

ஆயினும் இதில் உடன்பாடு எதுவும் எட்டப்படாததால் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்றது. (ஒ)

# கோரிக்கை நிறைவேறும்வரை எமது போராட்டம் தொடரும்

### தொண்டர் ஆசிரியர் உறுதி

திருகோணமலை,ஜூன்11

தமது கோரிக்கை முற்றாக நிறைவேற்றப்படும்வரை போராட்டம் தொடரும் என்றும் -

கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் சம்பந்தப்பட்டவர்கள் மெத்தனம் காட்டினால் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கவும் தயங்கப் போவதில்லை என்றும் -

வடக்கு - கிழக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களின் சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மறியற்போராட்டம் தொடர்பாக நேற்று மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சின் பின்னரே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

எதிர்வரும் டிசெம்பா முதலாம் திகதிக்கு முன்னர் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கமுடியும் என்றும் - ஆனால் பட்டியலில் ஆயிரத்து 460 பேர் இருப்பதால் ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்கப்படும்போது மீதி 460பேரும் ஆட்சேபனை தெரிவிக்கக்கூடாதென்றும் -

அதன்பின்னர் வடக்கு - கிழக்கில் தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் என்ற பிரச்சினை எழுப்பப்படக் கூடாதென்றும் -

இவற்றுக்கு உடன்பட்டு கடிதம் எழுதித்தந்தால் இந்த வருட இறுதிக்குள் நியமனங்கள் வழங்கப்படும் என்றும் -

அதிகாரிகள் தரப்பில் பேச்சின் போது தெரிவிக்கப்பட்டதாக சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசியல்வாதிகளாலும் அதிகாரிகளாலும் காலம் காலமாக ஏமாற்றப் பட்டுவரும் தாம், இந்த நிபந்தனைகளுக்கு உடன்படவில்லை என்று சம்மேளனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ஒ)

# ஆசிரியர்கள் நியமனத்துக்கு போதிய நிதிவளம் இல்லை

### கல்வி அமைச்சு அதிகாரி கைவிரிப்பு

திருகோணமலை,ஜூன்11

போதிய அளவில் ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ள போதிலும் நிதிப்பற்றாக்குறை காரணமாக உடனடியாக நியமனங்களை வழங்கமுடியாதுள்ளது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கே.சண்முகலிங்கம்.

மறியற் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்:

வடக்கு - கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களில் ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்குவதற்கான அனுமதி கிடைத்துள்ளது. வடக்கு - கிழக்கில் 3ஆயிரம் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்க வேண்டியுள்ளது.


இவர்களில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்கள், ஆயிரம் பட்டதாரிகள் மற்றும் ஜீ.சி.ஈ. உயர்தரம் சித்தியெய்தியவர்கள் ஆயிரம் பேர் அடங்குவர். ஆனால் இவர்கள் அனைவருக்கும் உடனடியாக நியமனங்களை வழங்குவதற்கு அரசிடம் போதியளவு நிதி ஆதாரம் இல்லை.

ஆனாலும் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் வழங்கும் சாத்தியம் உள்ளது.

ஆனால் பட்டியலில் உள்ள ஆயிரத்து 460பேரில் ஆயிரம் பேருக்கு மட்டுமே நியமனங்கள் வழங்க முடியும்

- என்று அவர் தெரிவித்துள்ளார். (ஒ)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு 07 ✦ 02 ✦ 1924

இறப்பு 13 ✦ 05 ✦ 2002

## திருமதி தம்பிமுத்து பாக்கியம்

அன்பின் ஜோதியாய் அறத்தின் வழிநின்று எம்மையெல்லாம் பண்புடனும் பாசத்துடனும் வளர்த்து ஆளாக்கி இறைபதம் எய்திய அன்புத் தாயின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தாயின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (12-06-2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

☆ நேரடியாக அழைப்புப் பெறாதவர்கள் இவ்வழைப்பையேற்று கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*எம்தாயின் மறைவுச் செய்தி கேட்டு துக்கத்தில்*
*- பங்குகொண்டோர்க்கும்*
*பகல், இரவு என்று பாராது பக்கத்தில் இருந்து அரவணைத்த*
*- எம்மவர்க்கும்*
*எதிர்பார்த்திரா உதவிகள் பல செய்த*
*- அயலவர்க்கும் நாம்*
*காத்திருந்து சொல்லும் நன்றிகள் பல...*

தகவல்:
R.செல்வராசா (பேரன்),
சோதி வேம்படி லேன்,
மானிப்பாய்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(4740)


### கைக்கடிகாரம் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்11

யாழ்.போதனா வைத்திய சாலையில் தவறவிடப்பட்ட கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு மருத்துவமனை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் எனப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ)


## தேவை

சமையல் தெரிந்த சிற்றூழியர் தேவை.

*தொடர்பு:*
**இல.140, பலாலி வீதி,**
**திருநெல்வேலி**
**(பரமேஸ்வராச் சந்திக்கு அருகில்).**

(4738)


# தெமோதர தோட்ட ஆஸ்பத்திரிக்கு பல லட்சம் செலவில் மாடிக்கட்டடம்

பதுளை மாவட்டத்திலுள்ள, தெமோதர தோட்ட வைத்தியசாலை சுமார் 125 லட்சம் ரூபா செலவில் இரண்டு மாடிக் கட்டடத்துடன் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சமூக அபிவிருத்தி அமைச்சரும், நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ பிரதி அமைச்சருமான பெ.சந்திரசேகரன் இந்தப் புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டுவைப்பார். இந்த வைபவத்தில் அமைச்சின் செயலாளர் எம்.பி.சி. டி சில்வா, மேலதிக செயலாளர் செ.பத்மநாதன் உட்பட அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொள்வர்.

தெமோதர தோட்ட வைத்தியசாலையை அமைச்சரவையின் தீர்மானப்படி அரசு பொறுப்பேற்றதெனினும், சுமார் 90 ஆண்டு பழைமை வாய்ந்த இந்தக் கட்டடத்தில் தற்போது நோயாளர் தங்கியிருப்பதோடு, வெளிநோயாளர் பிரிவும் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

எந்த நேரத்திலும் இடிந்துவிழும் நிலையில் இருந்த வைத்தியசாலைக்கு ஊவா பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளருடன், அமைச்சின் செயலாளர் எம்.பி.சி.டி சில்வா, மேலதிக செயலாளர் செ.பத்மாதன், பொறியியலாளர் பி.என்.ஆர். சமரசேகர ஆகியோர் விஜயம் செய்தபோது இந்த வைத்தியசாலையின் குறைகள் பற்றிக் கண்டறிந்து அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவந்ததையடுத்து, அமைச்சர் பெ. சந்திரசேகரன் பழைமை வாய்ந்த வைத்தியசாலைக் கட்டடத்தை உடனடியாக அப்புறப்படுத்தி புதிதாக இரண்டுமாடிக் கட்டடத்தை நிர்மாணிக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார். (எ)

### தீவுப்பகுதிமக்களின் போக்குவரத்து மையமான

# கரம்பொன் கண்ணகை இறங்குதுறையில் கடற்படையினர் புதிய முகாம் அமைப்பு

ஊர்காவற்றுறை,ஜூன்11

அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு போன்ற தீவுப் பகுதிகளுக்கான பயணிகள் படகுச்சேவை நடைபெற்றுவரும் ஊர்காவற்றுறை கரம்பொன் கண்ணகை அம்மன் இறங்குதுறையில் தற்பொழுது கடற்படையினர் புதிய முகாம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை முதல் கடற்படையினர் இந்தப் பணியில் ஈடுபட்டு வருவதைக் காணமுடிந்தது.

மேற்படி இறங்குதுறைக்கு செல்லும் வாயிலில் ஈ.பி.டி.பியினரால் அமைக்கப்பட்ட கட்டடம் ஒன்றிலேயே தற்பொழுது கடற்படையினர் முகாம் அமைந்துவருகின்றனர்.

முகாம் அமைக்கும் பணிகளைத் தொடர்ந்து மேற்படி இறங்குதுறை மூலம் தீவுப்பகுதிகளுக்குச் செல்லச் செல்லும் பயணிகள் முகாமுக்கு அண்மையில் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்படுவதுடன் இறங்குதுறை வரைக்கும் நடந்து செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, இறங்குதுறைப் பாலத்திலும் கடற்படையினர் காப்பரண்கள் அமைந்து வருவதால் பயணிகள் பொருள்களை ஏற்றி இறக்குவதற்கு இடையூறாக உள்ளதாக பயணிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை, புளியங்கூடல் பகுதியில் கடற்படையினர் அண்மையில் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளமை தெரிந்ததே. (எ-16)

# தென்மராட்சிப் பாடசாலைகளில் நிலவும் தளபாடப் பற்றாக்குறை

தென்மராட்சி,ஜூன்11

தென்மராட்சிப் பிரதேசத்தில் பெருமளவு பாடசாலைகள் மீள இயங்க ஆரம்பித்துள்ளபோதிலும் அவற்றில் பெரும்பாலான பாடசாலைகளில் போதிய தளபாடங்கள் இல்லாததால் கல்விச் செயற்பாடுகளைத் தொடர்வதில் பெரும் சிரமங்களை மாணவர்களும், ஆசிரியர்களும் எதிர்கொள்கின்றனர்.

யுத்த அனர்த்தங்களால் சேதமடையாத பாடசாலைகளில்கூட தளபாடங்கள் இல்லாதமையே பெரும் குறையாக உள்ளது. வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் இருந்து தமது இருப்பிடங்களில் மக்கள் மீளக் குடிமயர்ந்து வருவதால் ஒவ்வொரு பாடசாலையிலும் சராசரியாக எண்பது வீதமான மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

தற்போது வன்னிப் பிரதேசத்தில் தங்கியிருந்த பல குடும்பங்களும் சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்து வருவதால் இந்த மாணவர்களும் அயலில் உள்ள பாடசாலைகளில் இணைந்துகொள்கின்றனர். இதனால் பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறை நிலவுகிறது. சில பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குக்கூட மேசைகள் இல்லாத நிலை உள்ளது.

சில பாடசாலைகளின் ஆய்வு கூடங்கள் சேதமடைந்தும், ஆய்வு கூட உபகரணங்கள் இன்றியும் காணப்படுவதால் மாணவர்கள் ஆய்வுகூட வசதி பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளதையும் காணமுடிகிறது.

பாடசாலைக் கட்டடங்கள் சேதமடைந்து காணப்படுவதால் தற்காலிக கொட்டகைகளில் அமைந்துள்ள மிக நெருக்கமான வகுப்பறையில் மாணவர்கள் அமரவேண்டியுள்ளது.

பொதுவாக கிராமப்புறப் பாடசாலைகளில் அதிக சிரமங்கள் நிலவுகின்றன.

தென்மராட்சியில் உள்ள 58 பாடசாலைகளில் தற்போது 43 பாடசாலைகள் மீள இயங்குவதாகவும் -

இப்பாடசாலைகளில் 14 ஆயிரத்து 557 மாணவர்கள் கல்வி பயின்று வருவதாகவும் -

புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

2000ஆம் ஆண்டு இடம்பெயர்வன் முன்னர் 18 ஆயிரத்து 792 மாணவர்கள் கல்வி கற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)


## இன்றுமுதல் விசேட விலைக் குறைப்பு!

### கோழித்தீவனங்களின் விலை

**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உற்பத்திகளான குருணலாக்கப்பட்ட கோழித்தீவனங்கள்**

**மலிவுவிலையில் உங்கள் கைகளில்! இன்று 11.06.2002 முதல் விசேட விலைக்குறைப்பு!!**

| விவரம் | | மொத்தவிலை | சில்லறைவிலை |
|---|---|---|---|
| முட்டைத்தீன் | 25 கிலோ | 525.00 | 550.00 |
| வளர்தீன் | 25 கிலோ | 625.00 | 650.00 |
| குஞ்சுத்தீன் | 25 கிலோ | 675.00 | 700.00 |
| புறொயிலர்முடிவுதீன் | 25 கிலோ | 775.00 | 800.00 |
| புறொயிலர்ஆரம்பதீன் | 25 கிலோ | 775.00 | 800.00 |

மொத்தமாகக் கொள்வனவுசெய்ய விரும்புபவர்கள் உடன் சங்க அலுவலகத்தில் தொடர்புகொள்ளவும்.

**பொதுமுகாமையாளர்,**
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(C/22468)

# நாளை நடைபெறும் ஹர்த்தாலுக்கு பல பொதுஅமைப்புகள் ஆதரவு

யாழ்ப்பாணம்,ஜூன்11

நாளைய ஹர்த்தாலுக்கு முழுமையான ஆதரவு வழங்குமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புகள் பல கோரியுள்ளன.

**வர்த்தக சங்க சம்மேளனம்**

வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் விடுத்த செய்திக் குறிப்பில் -

ஸ்ரீலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டபின் அதனை நிறைவேற்றுவதில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசின் அசமந்தப்போக்கைக் கண்டித்து யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம், நாளை புதன்கிழமை நடத்தவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு யாழ். குடாநாட்டில் உள்ள சகல வர்த்தக சங்கங்களும் தமது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கவேண்டுமென யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் அன்பான வேண்டுகோள் விடுத்துள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வணிகர் கழகம்**

வணிகர் கழகம் விடுத்த செய்திக் குறிப்பில் -

புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதில் அரசதரப்பு காட்டி வரும் அசமந்தப்போக்கை கண்டித்து 12.06.2002 புதன்கிழமை யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் அழைத்துள்ள ஹர்த்தாலுக்குப் பூரண ஆதரவு வழங்கும்படி யாழ். வணிகர் கழகம் யாழ். வர்த்தகப் பெருமக்களுக்கு அன்பான வேண்டுகோள் விடுத்துள்ளது-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கிராம உத்தியோகத்தர் சங்கம்**

இந்தக் ஹர்த்தாலுக்கு, யாழ். மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கமும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் -

மக்களுடைய அபிலாஷைகளை நன்கு அறிந்தவர்கள் என்ற வகையில் மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம், மக்களின் உணர்வுகளை வெளிக்கொண்டுவரும் இப்போராட்டத்துக்கு எமது பூரண ஆதரவைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பல்கலை ஊழியர் சங்கம்**

ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் -

எமது சங்கமும் இந்த நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கும். அன்றையதினம் பல்கலைக்கழக ஊழியர் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் கடமைக்கு சமுகமளிக்காது, பிரார்த்தனையில் ஈடுபடுமாறு வேண்டுகிறோம்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழர் ஆசிரியர் சங்கம்**

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் -

மாணவர்களதும் மற்றும் பொது மக்களதும் இயல்புவாழ்வை உறுதி செய்வதற்கான இப்போராட்டத்துக்கு சகல அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தமது பூரண ஆதரவை வழங்கவேண்டும்.

அத்துடன் சகல கல்வி வலயங்களும் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையும் இப்போராட்டத்துக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனக் கேட்டுள்ளது.

**வகுப்புத் தொழிலாளர் சங்கம்**

வடபிராந்திய வகுப்புத் தொழிலாளர் சங்கமும் இக்ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

**விவசாய கூட்டுறவுச் சங்க சமாசம்**

மனிதநேய அமைப்புகளின் ஏற்பாட்டில் நாளை நடைபெறவிருக்கும் ஹர்த்தாலுக்கு யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று விடுக்கப்பட்ட பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

★ எதிர்வரும் 12.06.2002 ஆம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில் 06 - 10 - 1917

விண்ணில் 13 - 05 - 2002

### அமரர் சுப்பிரமணியம் கோபாலசாமி

*(இளைப்பாறிய மேற்பார்வையாளர். நீர்ப்பாசனத் திணைக்களம். வல்வெட்டித்துறை)*

நாளை (12.06.2002) புதன்கிழமை, மயிலியதனை, தொண்டமானாறில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெறவுள்ள 31ஆம் நாள் ஆத்ம சாந்தி நினைவு நிகழ்வில் கலந்துகொள்வதுடன், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

*தகவல்: கோ.சற்குணபாலன் (மகன்) (மக்கள் வங்கி) மயிலியதனை, தொண்டமானாறு.*

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள். (4538)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 1930 - 08 - 04

மறைவு 2002 - 05 - 12

### அமரர் சரவணமுத்து மாணிக்கம் (ஆச்சாரியார்)

*உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.*

இன்று (11.06.2002) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சங்கத்தானை, மீனாட்சி அம்மன் கோயிலடி, சாவகச்சேரி.* (4746)

- மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உ
சிவமயம்

## சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம் சைவசமயபாடக் கருத்தரங்கு - தீவகம்

### வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில்

நாளை (12.06.2002) புதன்கிழமை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சைவசமயபாடக் கருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணத்தினால் நாளை மறுதினம் (13.06.2002) வியாழக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது. அனைத்து சைவசமயபாட ஆசிரியர்களையும் 13.06.2002வியாழனன்று சமுகம் கொடுக்குமாறு அன்பாக வேண்டுகின்றேன்.

சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம். (C/22466)

*சைவப்புலவர்* **வ.கந்தசாமி** (பரீட்சைச் செயலாளர்)

## கண்ணீர் அஞ்சலி

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவில் வாழ்த்தி, பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட பிரபல எழுத்தோவியர்

### தம்பிப்பிள்ளை சூடாமணி

அவர்களின் திடீர் மறைவினால் துன்புற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரோடு நாமும் எமது துயரைப் பகிர்ந்துகொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கண்டி வீதி, அரியாலை.* (C/22469)

அரியாலை மக்கள் சார்பில், சு.தி.கொ.விழா நிர்வாகம்.

நிறைஞ்சனாஸ்
சங்கானை
ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், வீவேக் நடித்த
ரோஜாக்கூட்டம்
(ரீஸ்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C-22357)

நாகம்ஸ் சுன்னாகம்
இளைய தளபதி விஜய், உலக அழக பிரியங்கா சோப்ரா, வீவேக் நடித்த
தமிழன்
(ரீஸ்ஸ்)
காட்சிகள்: 11.00,3.00,6.30 (புதிய நேரம்) (4747)

ராஜா யாழ்ப்பாணம்.
விஜயகாந்த், லைலா, மணிவண்ணன்
கள்ளழகர்
காட்சிகள்: 10.30, 2.30 (C/22356)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றும் **திருமதி பு.பாலசிங்கம்** அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி பொன்னம்பலம் தெய்வானை

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்.

*யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், கரவெட்டி, கிளி/கிளாலி றோ.க.த. பாடசாலை.* (C/22473)

# மரண அறிவித்தல்கள்

## துரைராசா உதயகுமார்

கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா உதயகுமார் 09.06.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் துரைராசா - நகுலேஸ்வரி ஆகியோரின் அன்பு மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி நுணாவில், 8ஆம் கட்டையடி, சாவகச்சேரி.* (4752)

தகவல்: குடும்பத்தினர்.

## சிவஞானம் நித்தியானந்தம்

**(ஆனந்தன்)**

சண்டிலிப்பாய், கல்வளையைப் பிறப்பிடமாகவும் சீரணி நாகம்மாள் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் நித்தியானந்தம் அவர்கள் 09.06.2002 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் தங்கம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனும் பூபதியின் அன்புக் கணவரும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் மாணவிகளான லோஜினி, கிருசாந்தினி, நிசாந்தினி, தர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2002). செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் சங்கானை விளாவெளி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சீரணி சந்தி, சண்டிலிப்பாய்.* (C/22471)

தகவல்: திருமதி நி.பூபதி (மனைவி) திரு.சி.சதானந்தன் (சகோதரன்)

## செல்வி தனுயா சுந்தரலிங்கம்

**(B.Com. D.I.N. Computer IIS)**

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி தனுயா சுந்தரலிங்கம் நேற்று (10.06.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வை.சுந்தரலிங்கம் (விஞ்ஞான கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்) மற்றும் தனலட்சுமி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி) தம்பதிகளின் அன்பு மகளும் ரமணனின் (மருத்துவபீட மாணவன், ரஷ்யா) அன்பு அக்காவும் கப்டன் பாஸ்கரன், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் பாலேந்திரன் (ஆசிரியர், இராமநாதன் கல்லூரி), பாலச்சந்திரன், தனேஸ்வரி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), சிதம்பரேஸ்வரி, றஞ்சனாதேவி (தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்), இந்திராணி (ஆசிரியை, தாவடி இந்து கலவன் பாடசாலை), திரு.திருமதி நடராஜா, கோமளம் (மாலைதீவு) ஆகியோரின் பெறாமகளும் திருமதி தெ.இரத்தின கோபால், திரு.திருமதி செல்வரத்தினம் (ஈவினை), திரு.திருமதி குமார குலசிங்கம் (சுதுமலை) ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2002) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி வீதி, மானிப்பாய்.* (4755)

தகவல்: வை.பாலேந்திரன் (சிறிய தந்தை)

## குருசுமுத்து தேவசகாயம்

சாட்டி - 01, வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குருசுமுத்து தேவசகாயம் 08.06.2002 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை வேலணை சாட்டி மாதா தேவாலயத்தில் இன்று பி.ப. 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக சாட்டி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாட்டி - 01, வேலணை.* (4756)

தகவல்: தவநாயகம் (மகன்) (வேலணை பிரதேச செயலகம்)

## ஆறுமுகம் இராசரெத்தினம்

**(ஆயுர்வேத வைத்தியர்)**

யாழ். நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வைத்தியத் தொழில் செய்த இடமாகவும் கொண்ட ஆறுமுகம் இராசரெத்தினம் அவர்கள் 09.06.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகம்மா தம்பதிகளின் மூத்த மகனும் சுருவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் மங்கையர்க்கரசியின் கணவரும் இராசேஸ்வரி, இராசேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் தகப்பனாரும் கந்தசாமி (கொழும்பு), வாசுகி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் றஜோதன், றனீத்தா ஆகியோரின் பேரனும் கனகரெத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர், நவாலி), பரிமளம் நாகரெத்தினம், செல்லம்மா (இளைப்பாறிய நெசவு ஆசிரியை) ஆகியோரின் சகோதரனும் சுருவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சண்முகலிங்கத்தின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*65/3, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.* (4754)

தகவல்: குடும்பத்தினர்.

நிமலராஜன் படுகொலை விசாரணை

# ஈ.பி.டி.பி. உறுப்பினர் 19 பேரை பொலீஸில் ஆஜராகப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்11

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த மேலும் 19 பேரை விசாரணைக்காக யாழ்.பொலீஸ் நிலையத்தில் இன்று ஆஜராகுமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை நேற்று யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவு இன்ஸ்பெக்டர் பி.எச்.டி.ரஞ்சித் டி சில்வா நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மனுவை ஏற்று, நீதிவான் மேற்கண்டவாறு உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஈபிடிபியின் துணைப்பொறுப்பாளர் மணிபல்லவராஜனை நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகி ஆயுதங்களின பட்டியலைச் சமர்ப்பிக்கும்படி ஏற்கனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கட்சியின் மாநாடு ஒன்றில் பங்குபற்ற வேண்டியுள்ளதால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாதுள்ளதாக அவர் நேற்று நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் வழக்கு விசாரணையை நாளை புதன் கிழமைக்கு ஒத்திவைத்தது.

நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகத தவறிய ஈ.பி.டி.பியின் உறுப்பினரான கந்தசாமி ஜெகதீஸ்வரன் (ஜெகன்) என்பவருக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இன்று நீதிமன்றில் ஆஜராகுமாறு கூறப்பட்டுள்ள 19 பேரினதும் பெயர் விவரங்கள் வருமாறு:-

மில்ரன், ஈசன், மகேந்திரன், சிவராம், சிறி, உதயன், சலீம், கோபி, வர்ணன், ராசிக், திருச்செல்வம், உதயசிறி, சதாசிவம், குமார், கீதா, பாமா, சோதி, விசு, விஸ்வன். (ம-10-ரி)

## நாளை நடைபெறும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசத்தில் இயல்பு வாழ்க்கை ஏற்படாமல் இடர்களையும் சீர்குலைவையும் ஏற்படுத்துவதில் இராணுவத் தரப்பினரும் ஜனாதிபதியும் இரகசியமாகச் செயற்படுகிறார்கள்.

முன்பு இராணுவத்துடன் ஒத்துழைத்த ஜனாதிபதி சார்பான ஆயுதக் குழுக்களும் அவர்களுடன் ஒன்றுபட்டுச் செயல்படுகின்றன என்ற ஐயப்பாடுகள் எழுந்துள்ளன.

புரிந்துணர்வு ஒப்பதம் ஏற்படுத்தப்பட்டு 90நாள்களின்பின் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பதற்குப் பதிலாக ஒரு பக்கத்தில் இராணுவமும் மறுபக்கத்தில் கடற்படையினரும் புதிய கட்டுப்பாடுகளை விதித்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தையே சீர்குலைக்கும் வகையில் அச்சுறுத்தல்களிலும் ஈடுபடுகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட புலிகளின் அரசியல் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுகின்றனர்.

புதிய இராணுவத் தளங்கள், கண்காணிப்பு நிலைகள் உருவாக்கப்படுகின்றன. இன்றுவரையும் காவலரண்கள் அமைக்கவென பனை, தென்னை வளங்கள் இலட்சக்கணக்கில் அழிக்கப்பட்டுவிட்டன; அழிக்கப்படுகின்றன.

ஏற்கனவே உயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட வலி. வடக்கு தவிர சாவகச்சேரி தென்மராட்சிப் பிரதேசத்திலும் உயர் பாதுகாப்பு வலய உருவாக்கம் குறித்த அறிவித்தல்கள் வருகின்றன.

மீள்குடிமர்வுகள் தடுக்கப்படுகின்றன. வன்னியில் இருந்து வரும் குடும்பங்கள் கடல் வழியில் பயணம் செய்வது தடுக்கப்படுகின்றன.

இவை எல்லாம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கையே சீர்குலைக்கும் நடவடிக்கைகள் ஆகும்.

எனவே இத்தகைய, புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிரான நடவடிக்கைகளை நாம் கண்டிக்கின்றோம்.

இராணுவத் தரப்பினதும் ஜனாதிபதியினதும் தன்னிச்சையான இந்த நடவடிக்கைகளால் தமிழ்த் தேசத்தின் இயல்பு நிலை ஏற்படமுடியாமல் தடுக்கப்படுகிறது. இதற்கு அரசு துணைபோகமுடியாது. இந்த நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டும்.

அரசியல் தீர்வின் மூலம் தமிழ்த் தேச மக்கள் ஆட்சி உரிமை பெற வேண்டும். இதற்காக உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி நாளை புதன் கிழமை நடைபெறும் வேலை நிறுத்தத்தை முழுமையாக ஆதரிக்கிறோம்.

மக்கள் அனைவரையும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அழைப்பு விடுக்கின்றோம் என்றுள்ளது.(ம-3)

## மீனவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரியே - இந்தப்போராட்டம் இடம்பெறுகின்றது. நேற்றைய போராட்டத்தில் ஐநூறுக்கும் மேற்பட்ட மீனவர்கள் பங்கேற்றனர். இன்றும் போராட்டம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில்மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக கூட்டமைப்பு எம்.பிக்களான வீ.ஆனந்தசங்கரியும் மாவை சேனாதிராசாவும் இன்று பாதுகாப்பு அமைச்சருடன் கலந்துரையாடவிருக்கின்றனர்.(ம-10-17-86-51-6)

## வாஜ்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனித்தனியே பேச்சுக்கள் நடத்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சிகளுக்கு அவர்களின் ஆதரவைக் கோரினார்.

இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள், திருமலை எண்ணெய்த்தாங்கிகளை வாடகைக்கு வழங்குதல் உட்படப் பல விடயங்கள் குறித்தும் இந்தியத் தலைவர்களுடன் பேசியதாகவும் அவர் கூறினார்.

பிரதமர் வாஜ்பாயை இன்று சந்திக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முக்கிய விடயங்கள் குறித்தும் பேசவிருக்கின்றார்.

உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானியையும் பிரதமர் இன்று சந்திப்பார். அதைத் தொடர்ந்து சென்னை வரும் பிரதமர் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுடன் பேச்சு நடத்திய பின்னர் நாடு திரும்புவார்.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்த தனியார் சொகுசு பஸ் வண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

பஸ் சாரதியான ஆனந்தன் என அழைக்கப்படும் சிவஞானம் நித்தியானந்தம்(சண்டிலிப்பாய்) என்பவர் அதே இடத்திலேயே மரணமானார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த பஸ் நடத்துநரின் இரு கால்களும் துண்டிக்கப்பட்டன. ஆண்களும், பெண்களுமாக 10 பிரயாணிகள் காயங்களுடன் புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு 10.45 மணியளவில் இக்கோர விபத்து நடைபெற்றது. பாலாவி சிமெந்துத் தொழிற்சாலைக்குச் சிமெந்துப் பொருள்களை எடுத்துச் செல்லும் சரக்கு வண்டியின் பின்புறத்திலேயே பஸ் மோதுண்டது. சுமார் 75யார் தூரம் வரை பஸ்ஸை ரயில் இழுத்துச் சென்றதால் பஸ் முற்றுமுழுதாகச் சேதமடைந்துள்ளது.

காயமடைந்தவர்களில் இருவர் கொழும்பு வடக்கு ஆஸ்பத்திரிக்கு மேலதிக சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்துப் பற்றி அறிந்த அமைச்சர் அஸ்வரின் இணைப்புச் செயலாளர் பீ.எச்.ஹஸ்ரி உடனடியாகச் சம்பவ இடத்துக்குச் சென்று வேண்டிய உதவிகளை மேற்கொண்டார்.

புத்தளம் பொலீஸார் விசாரணை செய்கின்றனர். (ம-12-15-180)

## நாளை...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகதி நடைபெறவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு வழங்குவதுடன், புரிந்துணர்வு உடன்படிக்கையின் சகல ஏற்பாடுகளையும் அரசும், ஆயுதப்படையினரும் முழுமையாக அமுல் செய்யவேண்டும்.

★ தொடரும் மீனவர் போராட்டத்துக்கும் முழுமையான ஆதரவு தெரிவிப்பதுடன் அரசு இவ்விடயத்தில் உடன் தலையிட்டு சுமுகமான தீர்வை முன்வைத்து மீனவ சமுதாயத்தின் வாழ்வுரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதுடன் அரச செயலகம் செயலிழப்பதால் சாதாரண பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நீக்கும் கடமையையும் அரசு நிறைவேற்ற வேண்டும்.

★ யாழ். குடாநாட்டின் அடிப்படை வளங்களான பனை, தென்னை என்பனவற்றை இராணுவத் தேவைகளுக்குத் தறித்தெடுப்பதை அரசும், ஆயுதப்படையினரும் உடனடியாக நிறுதத வேண்டும். (ஜ-9-17)

## மாணவர் மோதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டன. மோதலின்போது கற்கள் மழையெனப் பொழிந்தன.

வளாகத்தின் உள்ளே நூலகத்துக்கு முன்பாக உள்ள மாணவர் இருக்கைகளும் உடைத்துத் தூளாக்கபட்டன.

மோதலை நிறுத்தி இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு விரிவுரையாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் ஆகியோர் பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொண்டபோதிலும் அது பலனளிக்கவில்லை.

இந்தத் தாக்குதல் சம்பவங்களைக கேள்வியுற்று பெருமளவு பொலீஸார் உடனடியாக வளாகப் பகுதிக்கு விரைந்தனர். எனினும் அவர்கள் வளாகத்துக்குள் பிரவேசிக்கவில்லை.

மாணவர்களின் தாக்குதலுக்கு இலக்கான தொலைத்தொடர்பு நிலையத்தை பொலீஸ் அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று நேரில் பார்வையிட்டது. சேதவிவரங்களையும் சேகரித்துக்கொண்டது.

மாணவர்களின் மோதலினால் பல்கலைக்கழக வளாகத்துக்குள் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது.

மாணவிகள் மற்றும் சில விரிவுரையாளர்கள் ஆகியோர் உடனடியாக தமது வீடுகளுக்குத் திரும்பினர்.

நேற்று நண்பகலுக்குப் பின்னர் சகல விரிவுரைகளும் ரத்துச் செய்யப்பட்டன. துணைவேந்தரின் பணிப்பின் பேரில் நேற்றுமாலை 3.30 மணிக்குப் பின்னர் வளாகத்தின் வாயில்கள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன.

மாணவர்கள் எவரும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

கடந்த வெள்ளியன்று நடந்த மோதலை அடுத்து சனி, ஞாயிறு இரு தினங்களும் பல்கலைக்கழகத்துக்குள் மாணவர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. நேற்று திங்கட்கிழமை காலை மாணவர்கள் வழமை போன்று வளாகத்தினுள் சென்ற பின்னரே மோதல்கள் மூண்டன.

அண்மைக்காலத்தில் பொது மக்களை வழிநடத்தும் பல முன்மாதிரியான செயல்களில் ஈடுபட்டு மக்களின் மதிப்பைப் பெற்றுக்கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள் தற்போது தமக்குள் வக்கிரமாக மோதிக்கொள்வது மக்கள் மத்தியிலும் சமூகத் தலைவர்களிடையேயும் கவலையை ஏற்படுத்தியிருப்பதை உணர முடிந்தது. (ஐ-4-10-86-8-6)

## ஹாட்லி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரை விலகும்படியும் - கோரியே இந்தப் போராட்டத்தை மாணவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

தமது கோரிக்கைகளுக்கு சரியான பதில் கிடைக்கும்வரை தமது போராட்டம் தொடரும் என மாணவர்கள் தெரிவித்தனர்.

கடந்த 24ஆம் திகதி இவ்விரு கல்லூரி மாணவர்களும் நடத்திய போராட்டத்தின் பின்னர் மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் இருந்து படையினர் வெளியேறியது தெரிந்ததே.

## கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் தும்பளைக் கடலில் குளிக்கச் சென்ற சமயம் சுழியில் சிக்கியதாகவும் - பின்னர் அவர் சடலமாக மீட்கப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது. மரண விசாரணையை பருத்தித்துறை பதில் நீதிவான் ந.தங்கராசா நடத்தி விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார். (ம-173)

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு இருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக நேற்றுக் காலை பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் பீடாதிபதிகள் கூடி ஆராய்ந்தனர். அதன் பின்னர் இருவர் கொண்ட விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்த விசாரணைக்குழு நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறும் என்றும் விசாரணைகள் முடியும் வரை பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்களைச சேர்ந்த மாணவர்கள், பல்கலைக் கழகத்தினுள் பிரவேசிப்பதற்குத் தற்காலிகத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் - பல்கலைக்கழக நிர்வாகம் அறிவிதத்துள்ளது.

விஞ்ஞானபீடம், கலைப்பீடம் (இராமநாதன் நுண்கலைக்கழகம் நீங்கலாக) மற்றும் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கே பல்கலைக் கழக வளவினுள் பிரவேசிப்பதற்கும், விடுதிகளில் தங்குவதற்கும் மறு அறிவித்தல்வரை தடை விதிக்கப்பட்டிருப்பதாக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஐ-10-ரி-4)


யசோ மோட்டோர்ஸ்

இதோ!

அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது ஸ்தாபனத்துக்கு மீண்டும் விற்பனைக்கு வந்துவிட்டன!

HERO HONDA SPLENDOR
HERO HONDA PASSION
HERO HONDA CBZ
SUZUKI FIERO
BAJAJ CALIBER
BAJAJ ASPIRE
YAMAHA RX 100
YAMAHA YBX
YAMAHA CRUX
HONDA CUSTOM C50
HONDA CUSTOM C90
PRESS CUB C50
CHALLY CF 50 - NEW MODEL HELMET
HONDA MD 90

(C/22472)

உடனே விஜயம் செய்யுங்கள்:

YASO MOTORS

163, 165, Stanley Road, Jaffna. T.P.2544

வாசிப்பதில் தாகம் உடையவரா நீங்கள்?

உங்களுக்கு ஒரு செய்தி!
நாளை இதே இடத்தில்



2003 A/L

இரசாயனவியல்

(Group Class)

டயஸ்

பிரிவு: 1

Paper Class

அசேதன இரசாயனம்

துரித மீட்டலுடன் கூடிய
சிறு அலகு ரீதியான கடந்தகால
வினாத்தொகுப்பு (1979-2002)

பிரிவு: 2

Theory Class

அவத்தைச் சமநிலை

குறிப்பு: பரீட்சைக் கருத்தரங்கு உட்பட மாதம் இரு பரீட்சைகள்.

ஆரம்பம்: 18.06.2002 3.00 p.m.

53/1, புதுவீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(4449)



PAPER CLASSES - 2002

Maths : K.P.S. விஜயன்
Science: E.J.K.யுபன்

நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்.

ஆரம்பம்: 2002-06-11
வெளி அனுமதிகள் உண்டு. (4724)



3 ஆவது பிரிவு ஆரம்பம்

13.06.2002
வியாழன் 4.00 p.m.

SPOKEN ENGLISH

By: Mr.M.A.HARI
*Director,*
HARY'S INSTITUTE,
Kondavil East,
Kondavil.

(4731)


# மரண அறிவித்தல்கள்

## இராமுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

மாதகலைப் பிறப்பிடமாகவும் அராலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் நேற்று (10.06.2002) திங்கட்கிழமை இணுவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் சிவசுந்தரராஜா, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் மேனகா, அருட்செல்வி ஆகியோரின் அன்பு மாமனாரும் டிலக்ஷன், சஜானா, திருச்செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேரனும் திலகவதி, சரோஜினிதேவி, விமலவதி, உருத்திராட்சபூபதி, ருபேந்திரா, புஷ்பாதேவி, நளாயினி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2002) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் கிழக்கு,*
*அங்கிலிப்பாய்*
*(தியேட்டர் ஒழுங்கை).* (4737)

தகவல்:
சிவசுந்தரராஜா, சிவகுமார்
(மக்கள்)

## அப்பாக்குட்டி குமாரசிங்கம்

**(ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர், யாழ். கச்சேரி)**

நாவற்குழி மேற்கு, சித்தி விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும் Hollandஐ வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி குமாரசிங்கம் அவர்கள் நேற்று (10.06.2002) திங்கட்கிழமை திருநெல்வேலியில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யதுஷ் வீடியோ,*
*15/12, மாரி அம்மன் வீதி,*
*திருநெல்வேலி தெற்கு.* (4757)

தகவல்:
R.ஈசன்
(மருமகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.